DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan
Joy H Selvanayagam
Homelife/Future Reality Inc., Brokerage

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX


ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel : 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
416 269 7198

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது ஆண்டை நோக்கி
Towards 25th Year in Publishing
www.canadauthayan.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் சுதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
$1.00
Tel : 416-752-1524
Fax: 416-752-6703
உதயம் 1260 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 29, 2020

- **உலக நாடுகளில் கொரோனா நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்களின் தொகை நேற்று 5,919,010 ஆக உயர்ந்தது...**
- **உலகெங்கும் கொரோனாவினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 362,121 ஆக அதிகரித்துள்ளது...**
- **இலங்கையில் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை ஒன்றால் அதிகரிப்பு மாற்றமில்லை...**
- **அமெரிக்காவில் 'கொரோனா' விற்கு பலியானவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிப்பு. மொத்த இறப்பு 103,430 ஆக உயர்ந்துள்ளது.**



கடந்த பல வாரங்களாக, உலக மக்கள் அனைவரையும் நடுங்கச் செய்யும் கொரோனா வைரஸ் நேற்று வியாழக்கிழமை மாலை வரை பலிகொண்ட மக்களின் எண்ணிக்கை நாடுகள் வாரியாக தரப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| அமெரிக்கா: 103,430 | இத்தாலி: 33,160 | கனடா: 6238 | இங்கிலாந்து: 37,850 |
| ஸ்பெயின்: 27,120 | ஜேர்மனி: 8570 | சீனா: 4639 | பிரான்ஸ்: 28,662 |
| ஈரான்: 7627 | இந்தியா: 4712 | இலங்கை: 10 | பெல்ஜியம்: 9389 |

# இலங்கை இராணுவ தளபதி போர்க் குற்றச்சாட்டிற்கு உள்ளானவர் என தெரிவிப்பது நியாயமற்றது என்கிறது ஜனாதிபதி ஊடகப்பிரிவு



இலங்கை இராணுவத்திற்கு எதிரான யுத்தகுற்றச்சாட்டுகளிற்கான ஆதாரங்கள் எதுவுமில்லை என இலங்கை அரசின் சார்பாக கருத்துத் தெரிவித்துள்ள ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு, தற்போதைய இராணுவத் தளபதி போர்க் குற்றசசாட்டுக்கு உள்ளானவர் என்று யாராவது கூறினால் அது நியாயமற்றது என்றும் தெரிவித்துள்ளது.

அண்மையில் இந்தியாவின் 'இந்து' நாளிதழில் வெளியான கட்டுரையொன்று குறித்து அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு இதனை தெரிவித்துள்ளது. இலங்கை யுத்த வீரர்களை இலக்குவைப்பதை சகித்துக்கொள்ளாது – ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச என இந்துவில் வெளியான விடயம் குறித்து தனது பதிலை ஜனாதிபதி ஊடகப்பிரிவு மேற்படி பத்திரிகையின் ஆசிரிய பீடத்திற்கு அனுப்பிவைத்துள்ளது.

மேற்படி பதில் அறிக்கையில், இலங்கை படையினர் யுத்த குற்றங்களில் ஈடுபட்டனர் என எவ்விதமான உத்தியோகபூர்வ ஆவணமும் நிருபிக்கவில்லை எனவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

எட்டுபொதுமக்களை கொலை செய்த படைவீரர் ஒருவருக்கு ராஜபக்ச பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்தமை குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளமை குறித்தும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு கண்டனத்தோடு சுட்டிக்காட்டியுள்ளது. ரத்னாயக்கவிற்கு தண்டனை வழங்குவதற்கு 13 வருடங்கள் எடுத்த போதிலும் இலங்கை நீதிமன்றம் இன்னும் நியாயமான சந்தேகங்களை கொண்டுள்ளது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கை 145000 விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களிற்கு பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்தது என தெரிவித்துள்ள ஜனாதிபதி ஊடகப்பிரிவு இதன் காரணமாக மன்னிப்பு வழங்குவது நியாயமற்றதோ அல்லது ஒழுக்கமற்றதோ இல்லை என குறிப்பிட்டுள்ளது.

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
✓ Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க...
மோகன் சுப்பிரமணியம்
Broker of Record / President
Direct Line: 416-321-2300 Office: 416-291-3000
6888 14th Avenue, Markham ON Independently owned and operated
PROPERTY MAX

# Carefirst Family Health Team
## Accepting New Patients



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com




# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
**416.298.FOOT (3668)**

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் உதயன் Uthayan Publishers
EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
4062 Ellesmere Rd, Scarborough, ON, M1C 1J2,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
Email: uthayannews@yahoo.com Website: www.canadauthayan.ca

உதயன் கதிரோட்டம்

# தடுப்பு மருந்து இல்லாமல் "திமிர்" காட்டும் கொரோனா! தடுமாறும் உலகம்... தத்தளிக்கும் மானுடம் !

கொரோனா வைரஸின் தாக்கத்தில் இருந்து உலகம் படிப்படியாக மீண்டு வருவதாகவே தற்போது செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. கொரோனா வைரஸ் பரவுதலின் ஆபத்தான கட்டமாகக் கருதப்படும் இரண்டாம் அலைத் தாக்குதலுக்குச் செல்வதற்கு முன்பாகவே சில நாடுகள் நிலைமைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டன. அவற்றுள் பல வளர்ச்சியடையாத நாடுகள் என்றால் அது மிகையாகாது.

அந்தந்த நாடுகளின் தடுப்பு நடவடிக்கைகளை உலகின் பல நாடுகள் பாராட்டி இருக்கின்றன. அரசாங்கம், மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் பாதுகாப்புப் படையினர் உட்பட இவ்விடயத்தில் பாராட்டப்பட வேண்டியவர்கள் பல தரப்பினராவர். அந்த நாடுகளின் அரசுகளும் பாராட்டுக்குரியவையே

இந்நிலையில் கொரோனா பரவுதல் ஆபத்தான நிலைமைக்குச் சென்று விடாமல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த நாடுகளின் பட்டியலில் இலங்கையும் ஒன்றாக விளங்குகின்றது. கொரோனா தொற்றுக்கு உள்ளாவோர் வீதம் இலங்கையில் தற்போது பெருமளவில் குறைந்திருக்கின்றது. ஆனாலும் இவ்விடயத்தில் அலட்சியத்தைக் கடைப்பிடிக்கக் கூடாது. தொடர்ந்தும் விழிப்புணர்வு பேணப்பட வேண்டும் என்பதே அங்கு முக்கியம் என்பது அவதானத்துடன் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

ஆனால் உலகின் வல்லரசு என்று தன்னைத் தானே போற்றிக் கொள்ளும் அமெரிக்காவில் கொரோனாவின் தாக்குதலக்கு மரணித்தவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தையும் தாண்டி இன்னும் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போகின்றது. ஆனால் அமெரிக்க அதிபர் இதைப்பற்றிக் கவலைப்படுவதாகவே தெரியவில்லை. அங்கு மரணிப்பவர்களின் எண்ணிக்கை வெறும் இலக்கங்கள் அல்ல, அவை உயிர்கள் என்பதை அவர் உணர்வதாகத் தெரியவில்லை. சீனாவையும் சிஎன்என் போன்ற ஊடக நிறுவனங்களைச் சீண்டுவதும் நாகரீகமற்றவராக உரையாடல்களை நடத்துவதுமாகவே அமெரிக்க ஜனாதிபதியின் நாட்கள் கழிகின்றன. ஆனால் கனடா போன்ற நாடுகளின் தலைவர்கள் பாராட்டுக்குரியவர்கள். இது நமக்கு பெருமை மட்டுமல்ல, பாதுகாப்பும் ஆகும்.

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக உலக நாடுகள் எங்குமே உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதனால் பல நாடுகள் எதிர்காலத்தில் உணவுப் பற்றாக்குறை வந்து விடக் கூடாதென்பதற்காகவே தங்கள் நாடுகளில் நாட்டில் தற்போது வேகமாக முன்னெடுத்திருக்கின்றன.

# அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தன்னை நெருங்கும் ஆபத்தான விடயங்களை உணர்ந்து கொள்ளாமலி இருக்கின்றாரா



அமெரிக்காவில் கொவிட் 19 தொற்றுநோய்க்கு பலியானவர்களின் எண்ணிக்கை இவ்வாரம் ஒரு இலட்சத்தைக் கடந்திருக்கும் நிலையில், பாரதூரமான பொருளாதார மந்தநிலைக்குள் தள்ளப்படும் ஆபத்தில் நாடு இருக்கிறது் தொற்றுநோயின் விளைவான பொதுச்சுகாதார நெருக்கடியை தவறான முறையில் கையாண்டமைக்காக ட்ரம்ப் கடுமையான கண்டனங்களுக்குள்ளாகியிருக்கிறார் இந்த இரு பிரச்சினைகளுடனும் பிணைப்பைக் கொண்ட சீனாவுடனான உறவுகளை கையாளுவதில் தனது அரசியல் எதிர்காலத்தை பாழடித்துவிடக்கூடிய தவறுகளை அவர் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறார்.

ஜனாதிபதி ட்ரம்பிற்கு பல முனைகளிலிருந்து ஆபத்துக்கள் நெருங்கிவருகின்றன என்பதே தற்போது நிதர்சனமாகத் தெரியும் உண்மைகள்.

தொற்றுநோய் முனையில் ட்ரம்ப் புதிய கொரோனாவைரஸை 'சீன வைரஸ்' என்று அழைத்து தொடர்ந்து ருவிட்டர் பதிவுகளைச் செய்துகொண்டிருக்கின்ற அதேவேளை, வெளியுறவு அமைச்சர் மைக் பொம்பியோ உட்பட அவரின் உயர் அதிகாரிகள் வூஹான் ஆய்வுகூடம் ஒன்றில் இருந்தே வைரஸ் தோன்றியது என்ற ஆதாரமெதுவுமற்ற கருத்தை திரும்பத்திரும்ப கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

மார்ச் மாத பிற்பகுதியில் சீன ஜனாதிபதி சி ஜின்பிங்குடன் தொலைபேசியில் உரையாடிய பிறகு சீற்றம் தணிந்தவராகக் காணப்பட்ட ட்ரம்ப், பிறகு அடுத்தடுத்த ஒரு சில வாரங்களில் மீண்டும் சீனாவை திட்டித்தீர்க்க தொடங்கியிருக்கிறார். சீனாக்கு வெளியில் இருந்துதான் வைரஸ் பரவியிருக்கிறது என்ற ஒரு பிசாரத்தை பெய்ஜிங்கும் முன்னெடுத்துக்கொண்டிருக்கிறது.

பொருளாதார முனையில், 2019 ஆம் ஆண்டின் பெரும்பகுதியிலும் சர்வதேச சந்தையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திய வர்த்தகப் போருக்கு முடிகாணும் நோக்கில் வரிகள் குறைப்பு மற்றும் வர்த்தக சலுகைகளை வழங்கும் முதற்கட்ட உடன்படிக்கையொன்றில் ஜனவரியில் சீனாவும் அமெரிக்காவும் கைச்சாத்திட்டு நெருக்கடி தணியும் என்ற எதிர்பார்க்கப்பட்ட நிலையில், தொற்றுநோய் மீண்டும் சகலதையும் பழைய நிலைக்கு கொண்டுவந்துவிட்டது. அமெரிக்காவில் இலட்சக்கணக்கானோர் வேலைவாய்புக்களை இழந்திருக்கும் நிலையிலும் சீனப்பொருளாதாரம் பொருளாதார மீட்சியைப் பெறுவதற்கு நீண்டநாட்கள் காத்திருக்கவேண்டும் என்பதாலும் எந்தத் தரப்பும் சலுகைகளை செய்யக்கூடிய மனோநிலையில் இல்லை என்று தெரிகிறது.

அடுத்த முனை நவம்பரில் அமெரிக்காவில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலாகும். இது ஏற்கெனவே நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் அமெரிக்க — சீன இருதரப்பு உறவுகளை மேலும் மோசமாக்க்கூடிய ஆபத்தைக் கொண்டிருக்கிறது. ஜனநாயக கட்சியின் வேட்பாளராக போட்டியிடவிருக்கும் முன்னாள் துணை ஜனாதிபதி ஜோ பிடென் கொவிட் 19 நோய் பரவத்தொடங்கிய ஆரம்பக்கட்டங்களில் உகந்த முறையில் சுகாதார நெருக்கடியை கையாளத் தவறியமைக்காக ஜனாதிபதி ட்ரம்பை கடுமையாக தாக்கிப்பேசி வருகின்றார். எச்சரிக்கை அறிகுறிகள் தெரிந்தபோதிலும் சமூக இடைவெளியை நடைமுறைப்படுத்துவதில் ட்ரம்ப் ஆர்வம் காட்டவில்லை. சீனாவைச் சீண்டுவதில் அவர் ஆர்வம் காட்டினாரே தவிர, அமெரிக்க மக்களை வைரஸில் இருந்து பாதுகாப்பது குறித்து மெத்தனமான அணுகுமுறையையே ஜனாதிபதி கடைப்பிடித்தார்.இந்த குற்றச்சாட்டுக்கள் வெள்ளைமாளிகையில் இரண்டாவது பதவிக்காலத்துக்கு தெரிவுசெய்யப்படுவதற்கான அவரின் வாய்ப்பை பெருமளவுக்கு பாதிக்கக்கூடிய சாத்தியம் இருக்கிறது.

# தனது இசைக் கச்சேரிகள் மூலம் ரசிகர்களை பரவசப்படுத்திய 'சங்கீத பூசணம்' வேலாயுதபிள்ளை ஆசானுக்கு எமது அஞ்சலி

கடந்த 27 வருடங்களாக கனடா என்னும் அற்புதமான தேசத்தில் வாழ்ந்த வண்ணம் தான் வரித்து கொண்ட இசை என்னும் ஆழமான துறையோடு தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டு வாழ்ந்து வந்த சங்கீத பூசணம் திரு ஐயாத்துரை வேலாயுதபிள்ளை அவர்கள் கடந்த 16-05-2020 அன்று இவ்வுலக வாழ்வை நீத்தார்.

எமது ஈழ மண்ணில் கல்வியங்காடு என்னும் இடத்தில் 1934ம் ஆண்டு அவதரித்த வேலாயுதபிள்ளை அவர்கள், 1959ம் ஆண்டு இந்தியாவில் தமிழ்நாட்டில் அமைந்துள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நான்கு வருட காலம் கர்நாடக இசைத்துறையில் கற்று 1963ம் ஆண்டு சங்கீத பூசணம் பட்டம் பெற்று இலங்கை திரும்பினார்.

1966ம் ஆண்டு மட்டக்களப்பு வந்தாறுமூலை மகா வித்தியாலயத்தில் சங்கீத ஆசிரியராக நியமனம் பெற்று அடுத்து, பருத்தித்துறை மெதடிட்ஸ் மகளிர் கல்லூரியில் 1972ம் ஆண்டிலிருந்து பணியாற்றி, இறுதியாக நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் கடமையாற்றி தனது இசைஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

தனது ஆசிரிய சேவைக் காலத்திலும் ஓய்வு பெற்ற பின்னரும், சுமார் 30 வருடங்களாக இலங்கை ஒலபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் கர்நாடக இசை ரசிகர்கள் விரும்பும் வகையில் இசைக் கச்சேரிகள் செய்து பல இலட்சம் ரசிகர்களின் மனங்களில் இடம் பிடித்தார்.



பின்னர் 1993ம் ஆண்டு கனடாவிற்கு குடியுரிமை பெற்று வந்த நாட் தொடக்கம் இறுதிவரை இசைத்துறையிலிருந்து விலகி நிற்காமல் சிரித்து முகத்துடனும், சீரிய பண்புடனும் அனைவரோடும் பழகி வந்தார். இங்கு நடைபெறும் இசைப் பரீட்சைகளுக்கு பிரதம பரீட்சகராகவும் கடமையாற்றி நேர்மையான பணியை ஆற்றினார்.

ஒரு இசையாசிரியருக்கு இருக்க வேண்டிய அனைத்து நற்குணங்களையும் கொண்டவராய் விளங்கிய ஆசான் வேலாயுதபிள்ளை அவர்கள். இசை பயிலும் மாணவ மாணவிகளுக்கு புத்திமதிகளும் ஆலோசனைகளும் கூறி அவர்களை ஊக்கப்படுத்தும் உயர்ந்த உள்ளம் படைத்தவர் என்பதை நாம் அனைவரும் நன்கு உணர்ந்து கொண்டவர்களாக இருந்தோம்.

இவ்வாறான ஆற்றலும் அன்பு பாராட்டும் நற்குணமும் கொண்ட 'ஆசான்' வேலாயுதபிள்ளை அவரகளின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு. அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம் கனடா வாழ் நடன மற்றும் இசையாசிரியர்கள் சார்பாக:- வீணை ஆசிரியை ஜெயந்தி இரட்ணகுமார்.

உங்கள் வரித்தேவை, வியாபாரக் கணக்கு எதுவாயினும், திறமை, அனுபவம், தேர்ச்சி பெற்ற கணக்காளர்.

NEED HELP WITH YOUR TAXES? WE GOT YOU COVERED!!

- Corporate Tax
- Personal Tax Planning
- Accounting
- Financial Statements
- Business Plan & Proposals
- For all your Business Needs



Call: 416 293 1616
416.438.9799
www.aricpa.ca · ari@aricpa.ca

MP Accounting & Finance Services Inc
1750 Brimley Road, Suite 213,
Toronto, ON. M1P 4X1

ARI A. ARIARAN CPA, CGA
Chartered Profressional Accountant

# உலக நாடுகளால் 'சமாதான தூதர்' என்று போற்றப்பட்ட ஜவஹர்லால் நேருவிற்கு 56-ஆவது நினைவு நாள்

- நக்கீரன், கோலாலம்பூர்.



கோலாலம்பூர், மே 27:

உலக அரங்கில் சமாதான தூதவராக புகழ் பெற்ற இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேருவிற்கு மே 27-ஆம் நாள் 56-ஆவது நினைவு நாள். மலேசிய இந்தியர் காங்கிரஸ் தொடங்குவதற்கு அதிகாரப்பூர்வ கடிதம் வழங்கியவரும் நேருதான்.

ரோஜாவின் ராஜா என்றும் சிறுவர்களால் மாமா என்றும் அன்போடு அழைக்கப்பட்ட நேருவின் வாழ்க்கை வரலாறு பிரிட்டிஷ் இந்தியாவையும் சுதந்திர இந்திராவையும் இணைக்கக்கூடியது.

20-ஆம் நூற்றாண்டின் மையப் பகுதியில் உலக நாடுகள் யாவும் அமெரிக்காவையும் அன்றைய ஒன்றுபட்ட ரஷ்யாவையும் சார்ந்து இரு பிரிவு-கலாக அணிவகுத்த வேளையில், நேருவோ, அணி சேராக் கொள்கையை அறிமுகம் செய்து மூன்றாவது அணியைத் தோற்றுவித்து பெருமை பெற்றார்.

எந்த நேரமும் பரபரப்புக்கு பஞ்சமில்லாத பிரதமர் பதவி வகித்த வேளையிலும் படிக்கும் வழக்கத்தை சுவாசமெனக் கொண்டிருந்தவர் நேரு. அவர், சிறந்த எழுத்தாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சுதந்திர போராட்டம் காரணமாக ஒன்பது வருடங்கள் சிறையில் கழித்த நேரு, அந்த நாட்களில் ஒரு சில நூல்களை எழுதினார்.

1934ல் "உலக வரலாற்றின் காட்சிகள்", 1936ல் "சுயசரிதை", "இந்தியாவின் கண்டுபிடிப்பு" ஆகியவை நேரு எழுதிய நூல்கள்

இந்திய சுதந்திர இயக்கத்தின் முன்னோடியாக கருதப்படும் நேரு, 1947 ஆகஸ்ட் 15-இல் இந்தியா விடுதலை அடைந்தது முதல் 1964 மே 27-இல் அவர் இறக்கும்வரை பிரதமராக பணியாற்றினார்.


இவர் பிறந்த நாளான நவம்பர் 14-ஆம் நாள்(1889) இந்தியாவில் குழந்தைகள் தினம் என்ற பெயரில் பொது விடுமுறை நாளாக அனுசரிக்கப்படுகிறது.

கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தகவல் தொழில்நுட்ப வசதியெல்லாம் அந்த அளவிற்கு வளர்ச்சி கண்டிராதபோதும், அன்றைய மலாயாவின் அரசியல், சமூக சூழலெல்லாம் உடனுக்குடன் இந்தியாவில் பிரதிபலித்தன.

குறிப்பாக, இளம் வயதிலேயே தொழிற்சங்கத் தலைவர்களாக உருவாகி மலாயாவாழ் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைக்காக குரல் கொடுத்த எஸ்.ஏ.கணபதி தூக்கில் இடப்பட்டது, வீரசேனன் படுகொலை செய்யப்பட்டதெல்லாம் அன்றைய இந்தியாவில், குறிப்பாக தமிழகத்தின் வலுவாக பிரதிபலித்தன.

கணபதிக்காக தமிழக ஏடுகளில் தலையங்கம் தீட்டப்பட்டது சிறப்புச் செய்திகளும் வெளியிடப்பட்டன. இந்தியா விடுதலை அடைந்தபின் மலாயாவில் வாழ்ந்த இந்தியர்களுக்கு சுதந்திர வேட்கை பெருக்கெடுத்தது. கூடவே, அரசியல் மறுமலர்ச்சியும் மெல்ல முகிழ்ந்தது.

அதனடிப்படையில்தான் மலேசிய இந்தியர் காங்கிரஸ் கட்சியும் உதயமானது. இதன் ஆதாரமாகவும் ஆணி வேராகவும் இருந்தவர் பண்டித ஜவஹர்லால் நேருதான். பேரா மாநிலம், கோல கங்சாரில் தோன்றிய ஜான் திவி, கல்விமானாகவும் சமூகப் பற்றாளராகவும் விளங்கினார். அதேவேளை, மலாயாவின் சுதந்திரத்திலும் அதீத அக்கறைக் கொண்டிருந்ததால் நேதாஜி சுபா' சந்திர போஸின் விடுதலை இயக்கத்தில் தீவிர ஈடுபாடு காட்டினார். அத்துடன் நேருவுடனும் தொடர்பு ஏற்பட்டது.



அதன் அடைப்படையில்தான் இந்திய தேசிய காங்கிரஸின் சாயலில், அதன் ஒரு கிளையாகவே அன்றைய மலாயா இந்தியர் காங்கிரஸ் (மஇகா) தோற்றுவிக்கப்பட்டது. மஇகா-வின் முதல் தலைவராக ஜான் திவிக்கு அதிகாரப்பூர்வ கடிதம் வழங்கியவரே நேருதான். அப்பொழுது, இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராக நேருதான் விளங்கினார்.

பத்திரிகையாளர், எழுத்தாளர், அரசியல் தலைவர், பிரதமர், பகுத்தறிவாளர், சமதரும(சோசலிச)வாதி என்றெல்லாம் பல்வகையாலும் சிறந்து விளங்கிய நேரு, அரசியல் அடிப்படையில் ஏராளமான தவறுகளைச் செய்தார்.

கா'மீரில் பிரிவினைவாதம் இன்றளவும் தொடர்வதற்கு அவர்தான் காரணம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில ஆட்சியை முதன்முதலாக கேரளத்தில் களைத்தவர் இவர்தான்.

தமிழக அரசியலைப் பொருத்தமட்டில், காமராசரைக் கொண்டாடிய நேரு, அண்ணாவை மிகவும் வெறுத்தார். அறிஞர் அண்ணாவைப் பற்றி இளப்பமாக எண்ணி இருந்த நேரு, அண்ணா இந்திய நாடாளுமன்ற மேலவையில் கன்னி உரை நிகழ்த்தியபோது, அவருக்கான நேரம் முடிந்ததும் அன்றைய மேலவைத் தலைவர், பேச்சை நிறுத்திக் கொள்ளும்படி மணி ஒலித்தபோது அதைத் தடுத்த நேரு, அண்ணா பேசி முடிக்கும்வரை இடையூறு செய்ய வேண்டாம் என்று தகவல் தெரிவித்துவிட்டு, உடனே தன்னுடைய அறைக்குச் சென்று அண்ணாவின் கருத்தாழமிக்க ஆங்கில சொற்பொழிவை இமைகொட்டாமல் செவிமடுத்தாராம்.

அண்ணா பேசி முடித்ததும், தான் அவரைச் சந்திக்க வேண்டும் என்று தன்னுடைய உதவியாளரிடம் உடனே சொல்லி அனுப்பினார் நேரு. அண்ணாவைத் தேடி வந்த அவரின் உதவியாளருக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது. பேசி முடித்ததும் சென்னைக்குத் திரும்ப புதுடில்லி விமான நிலையத்திற்கு விரைந்துவிட்டார் அண்ணா என்பதை அறிந்த நேரு, நேரத்தை அண்ணா எப்படி அளந்து பயன்படுத்துகிறார் என்பதை அறிந்து மேலும் வியப்பில் ஆழ்ந்தாராம்.

ஆசிய சோதி என்றும் சாமாதான புறா என்றும் அழைக்கப்பட்ட நேருவின் புகழ் இந்தியாவைக் கடந்து உலக வரலாற்றில் நிலைபெற்றிருக்கும்.

*நக்கீரன் - Nakkeeran: 013-244 36 24*


SKN FINANCIAL
www.sknfinancial.com




கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்

$ அவசரப் பணத் தேவையா? புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
$ புதிய மனைஸ்ன வாங்குவதில் பணச்சிக்கலா?
$ உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
$ உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்குப் பலவிதமான திட்டங்கள் உள்ளன
$ வட்டித் தொகைக்கு வரிவிலக்கு பற்றுச் சீட்டு வழங்கபடும்

முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டது

உங்கள் நகைகளுக்குப் பாதுகாப்பு!..
குறைந்த வட்டி!..(2% முதல்)
நிறைந்த பெறுமதி!...
www.sknfinancial.com

SCARBOROUGH
801 Markham Road
(Painted Post Plaza)
Markham & Ellesmere
647-729-5238

BRAMPTON
85 Kennedy Road South, Unit 33
( Next to TIM HORTONS )
Kennedy & Steeles
905-499-0800

# ஆறுமுகன் தொண்டமான் – ஒரு பார்வை

- சிவா பரமேஸ்வரன் -
- முன்னாள் மூத்த செய்தியாளர் பிபிசி-தமிழ்ச் சேவை.



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான அரசின் சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் இன்று 26-5-20 செவ்வாய்க்கிழமை இரவு காலமானார்.

கடந்த 26 ஆண்டுகளாக நுவரேலியா மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்துக்குத்தேர்தெடுக்கப்பட்ட அவர், பல ஆட்சிகளில் அமைச்சராக இருந்துள்ளார்.

அவரது தாத்தா சௌமியமூர்த்தி தொண்டமாமன் நிறுவிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவராகவும் இருந்த அவர், மலையகப் பகுதியில் அண்மைக் காலம் வரை குறிப்பிடத்தகுந்த ஆளுமையுடன் இருந்தார். ஹசந்தா அரசியலைஹ மையப்படுத்தியே அவரது அரசியல் இருந்தது.

இலங்கைப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கியத் தேயிலையும் அதன் உற்பத்தியில் தங்களை அர்பணித்த தோட்டத் தொழிலாளர்கள் அளித்த சந்தாவின் வளர்ந்த கட்சியே இ தொ க. இரு தசாப்தங்களுக்கும் மேலாக நாடாளுமன்ற உறுப்பினராகவும், பல ஆண்டுகள் அமைச்சராகவும் இருந்த அவர், ஹதோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை மேம்பட போதிய பங்காற்றவில்லை, மாறாக தன்னை வளர்த்துக் கொண்டு சொத்து சேர்ப்பத்திலேயே குறியாக இருந்தார்ஹ எனும் குற்றச்சாட்டுக்கு ஆளாகியிருந்தார்.

ஹஅடாலடி அரசியலுக்குஹ பெயர்போன ஆறுமுகன் தொண்டமான், பொதுவாக ஊடகங்களிடம் பேசுவது மிகக் குறைவு. அரிதாக அப்படிப் பேசினாலும் அதில் தெளிவில்லாமலும், நேரடியான பதிலும் இருக்காது.

எனினும் அவரை நேரில் கண்டும், தொலைபேசி மூலம் பல முறை உரையாடும் வாய்ப்பு எனக்கு இருந்தது. பிபிசி தமிழோசையில் நான் மூத்த தயாரிப்பாளராக இருந்தபோது, மலையகத்தின் சமூக அரசியல் விடயங்கள் தொடர்பில் அவருடன் உரையாடியுள்ளேன். கேட்கும் கேள்விகளை காத்திரமாக மறுக்கவும் மாட்டார், அதற்கு ஆழமான புரிதலுடன் பதிலளிக்கவும் மாட்டார் தொண்டமான்.

விளம்பர அரசியல் இல்லாத ஒரு அரசியல்வாதியாக இருந்தவர் மறைந்த தொண்டமான், அதேவேளை ஆடம்பர வாழ்க்கையை வாழ்ந்தவர். 'தேயிலைத் தோட்டம் மற்றும் அங்கு இரத்தம் சிந்தி உழைக்கும் தொழிலாளர்களுடன் அவர் தேநீர் அருந்திப் பார்த்ததில்லை, மாறாக ஐந்து நட்சத்திர ஹொட்டல்களிலேயே அவர் தேநீர் அருந்த விரும்புவார்ஹ என்று மலையகப் பகுதி மக்கள் என்னிடம் கூறியுள்ளனர்.

தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்காக குரலெழுப்பாத ஒரு தலைவராகவே அறியப்பட்டார் ஆறுமுகன் தொண்டமான். மலையக அரசியலில் அவருக்குப் போட்டியாக இருந்த சந்திரசேகரன் விடுதலைப் புலிகளுடன் நெருக்கமாக இருந்ததும் இதற்கு ஒரு காரணமாக இருந்தது.

ஹஹஅது அவர்கள் பிரச்சினை, அவர்கள் கவனிக்கட்டும், மலையகப் பிரச்சினை எங்கள் பிரச்சினை, அதை நாங்கள் கவனிக்கிறோம்ஹஹ என்று எனக்களித்த பேட்டியொன்றில் கூறியிருந்தார் ஆறுமுகன் தொண்டமான்.

எனினும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் சந்திக்க விரும்பி விடுத்த அழைப்பில் ஆறுமுகன் தொண்டமானும் கலந்து கொண்டார். அச்சந்திப்பில் மனோ கணேசன், காலஞ்சென்ற பெரியசாமி சந்திரசேகரன், ரவூப் ஹக்கீம் உட்பட பலர் பங்குபெற்றனர். பெரும்பாலும் அனைவரையும் ஒருமையில் விளித்து பேசுவது அவரது இயல்பு.

ஹஹஇதில் என்னைய்யா இருக்கு சொல்ல, ஊடகங்களுக்கு சொல்லி என்னா ஆவப் போவுது. நீங்களா வந்து தோட்டத்தில் வேலை செய்யப் போறீங்கஹஹ என்று பேசுவது அவரது ஸ்டைல்.

மலையகப் பகுதியில் ஹலயன் வீடுகளில்ஹ இன்றும் வாழ்ந்து வரும் தோட்டத் தொழிலளர்களில் சிலருக்கு, இந்திய அரசின் உதவியுடன் வீடுகளை அளித்ததில் ஆறுமுகன் தொண்டமானுக்கு பங்கிருந்தது.

சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, கோத்தாபய ராஜபக்ஷ ஆகியவர்களின் அரசுகளில் அவர் அமைச்சராக இருந்தாலும், தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் மலையகம் சார்ந்த துறைகளுக்கான அமைச்சுப் பொறுப்பே அவருக்கு அளிக்கப்பட்டிருந்தது.

கடந்த ஆட்சியிலும் அவர் அமைச்சராக முயன்றார். ஆனால் இ தொ கா வை விட கூடுதலான ஆசனங்களை வென்றிருந்த மலையக் கட்சிகளின் எதிர்ப்பு காரணமாக அது முடியாமல் போயிற்று.

தனிப்பட்ட முறையில் பழகுவதற்கு இனிமையானவர் ஆறுமுகன் தொண்டமான். பேட்டி, அரசியல் முரண்பாடு, தமிழ் மக்களின் பிரச்சினைகள் போன்ற விடயங்கள் விவாதிக்கப்படாதவரை அவருடன் ஆறுதலாக உரையாடலாம்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஹஒரு குடும்பக் கட்சிஹ எனும் விமர்சனத்துக்கு வலுவூட்டும் வகையிலேயே அவரது செயல்பாடுகள் இருந்தன. இன்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவை சந்தித்ததே அவரது கடைசி அரசியல் சந்திப்பாக இருந்தது.

போர் காலத்திலும் அதற்கு பின்னரும் வடக்கு கிழக்குப் பகுதி மக்களுக்கான அவரது பங்களிப்பு மிகவும் குறைவு எனும் விமர்சனம் அவர் மீது இருக்கவே செய்யும்.

# கொரோனா அச்சம் நீங்கும் வரை முகக்கவசமே மக்களுக்குத் துணை



பெருந்தொற்றாகப் பரவி வரும் கொரோனா வைரஸ் தாக்கம் குறைவதற்கு இன்னும் நீண்ட காலம் ஆகும் என்று நிபுணர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்கள் கூறி வருகின்றனர். எனவே உலகின் பல நாடுகளில் உள்ள அரசாங்கங்கள் இயல்பு வாழ்க்கைக்கு மீண்டும் மக்களைக் கொண்டு செல்ல வழி நடத்தி வருகின்றன.

பல நாடுகளிலும் அமுல்படுத்தப்பட்டு வரும் ஊரடங்கில் தளர்வுகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. இந்த தளர்வுகள் கொடுக்கப்பட்டதால் நாம் கொரோனாவை வென்று விட்டோம் என்பது அர்த்தமில்லை. வைரஸ் தாக்கும் அபாயம் இப்போதும் அதிகம் உள்ளது.

பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் சமூக விலகலை நாம் மேலும் தொடர்ந்து பின்பற்ற வேண்டும். பொது இடங்களுக்குச் செல்லும் போது முகக்கவசம் அணிவதை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். மக்கள் பாதுகாப்பாக இருக்க சில குறிப்பிட்ட நடவடிக்கைகளை கட்டாயம் பின்பற்ற வேண்டும் என்பதுதான் அறிவுரையாக இருக்கின்றது.

மேலும் முகக்கவசம் அணியும் போது சில குறிப்பிட்ட வி'யங்களில் கட்டாயம் கவனம் செலுத்த வேண்டும். அழுக்கு நிறைந்த கைகளால் முகக்கவசத்தை தொடக் கூடாது.

இப்படி அழுக்குக் கைகளால் முகக்கவசத்தைத் தொடுவதால் முகக்கவசம் அணிவதற்கான பலன் முற்றிலும் அழிக்கப்படுகிறது. கிருமிகளிடமிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளவே நீங்கள் முகக்கவசம் அணிகிறீர்கள்.

ஆனால் நீங்கள் அழுக்குக் கைகளால் முகக்கவசத்தைத் தொடுவதால் உங்களை நீங்களே அபாயத்திற்கு உட்படுத்திக் கொள்கிறீர்கள். எனவே முகத்தில் உள்ள முகக்கவசத்தைத் தொடுவதற்கு முன்னர் கைகளை சுத்தமாகக் கழுவ வேண்டும். முகம் மற்றும் கைகளை சவர்க்காரம் பயன்படுத்திக் கழுவிய பின்னர் முகக்கவசம் அணிவது இன்னும் சிறந்தது. ஒருவேளை முகக்கவசத்தை சரி செய்யும் நிலை ஏற்பட்டால் கைகளை சனிடைசர் பயன்படுத்தி சுத்தம் செய்த பின்னர் சரி செய்யவும்.

ஒரு நாள் முழுவதும் ஒரே முகக்கவசம் அணிவதைத் தவிர்க்கவும். ஒரு நாள் முழுவதும் வெளியில் வேலை செய்பவர்களுக்கு இந்தக் குறிப்பு பொருந்தும். வெளியில் வேலைக்குச் செல்பவர்கள் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும். ஆகவே உங்கள் கையில் எப்போதும் கூடுதல் எண்ணிக்கையில் முகக்கவசம் வைத்திருக்க வேண்டும்.

பொதுவாக இரண்டு மணி நேரத்திற்கு மேல் ஒரு முகக்கவசம் அணிவதைத் தவிர்க்க வேண்டும். இரண்டு மணிநேரத்திற்குப் பின்னர் நீங்கள் வேறு ஒரு முகக்கவசம் பயன்படுத்தலாம் அல்லது அணிந்திருக்கும் முகக்கவசத்தை கிருமி நீக்கம் செய்து மீண்டும் பயன்படுத்தலாம். காரணம் இந்த நேரத்திற்குள் கிருமிகள் அந்த முகக்கவசத்தில் படிந்திருக்கலாம். அதனை நீங்கள் நுகரும் வாய்ப்பு ஏற்படலாம்.

முகக்கவசத்தை சரியான விதத்தில் அணிய வேண்டும். எல்லா முகக்கவசமும் ஒரே அளவில் இருப்பதில்லை. சில முகக்கவசங்கள் மூக்கின் கீழ் விழுந்து விடக்கூடியதாக உள்ளன. சிலர் அணியும் முகக்கவசம் வாய்ப் பகுதிக்கு மேல் இருக்கிறது.

இப்படிப்பட்ட முகக்கவசம் அணிவதால் ஒருவேளை உங்களுக்கு கிருமிப் பாதிப்பு இருந்தால் பொது இடங்களில் நீங்கள் இருமும் போது அல்லது தும்மும் போது கிருமிகள் வெளியில் பரவும் வாய்ப்பு அதிகம் உள்ளது. ஆகவே நீங்கள் ஒவ்வொரு முறை முகக்கவசம் அணியும் போதும் அதனை கச்சிதமாக அணிந்து கொள்ளுங்கள். உங்களுக்கு ஏற்ற அளவில் உங்கள் மூக்கு மற்றும் வாய்ப் பகுதியை முற்றிலும் மூடும்படி பார்த்துக் கொள்ளவும்.

முகக்கவசத்தை கிருமி நீக்கம் செய்வதற்கு இரசாயனங்களைப் பயன்படுத்த வேண்டாம். இதற்கு ‘அல்ககோல் ஸ்ப்ரே’ மட்டும் பயன்படுத்தலாம். இதனைப் பயன்படுத்துவதால் முகக்கவசத்தில் ஒட்டியிருக்கும் கிருமிகள் முற்றிலும் கொல்லப்படும். இதனை எப்போதும் உங்கள் கைப்பையில் வைத்துக் கொள்ளுங்கள். வீட்டில் தயாரிக்கப்படும் முகக்கவசங்கள் பயன்படுத்தும் போது வழக்கமாக பயன்படுத்தும் சலவை பவுடர் மற்றும் சூடான நீர் கொண்டு சுத்தம் செய்யலாம். நன்றாக உலர வைத்து பின்பு பாதுகாப்பான இடத்தில் வைத்து பயன்படுத்தலாம். எல்லா முகக்கவசங்களும் முன்பக்கம் மற்றும் பின்பக்கம் கொண்டு தயாரிக்கப்படுகின்றன. சுவாசிக்கக் கூடிய வகையில் உள்ள துணி கொண்டு பின்பக்கமும், சற்று கடினமான துணி கொண்டு முன்பக்கமும் தயாரிக்கப்படுகின்றன. இதனால் வடிகட்டும் செயல்முறை சிறப்பாக இருக்கும். அதனால் முகக்கவசம் அணிவதற்கு முன் சரியாக பரிசோதித்து அணியவும்.

# எஞ்சியிருப்பது இராதந்திரப் போராட்டம் அதனை சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் கையில் எடுத்துள்ளார்கள்!

நக்கீரன்- கனடா




மழைவிட்டும் தூவானம் விடவில்லை என்பார்கள். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஆ. சுமந்திரன் சிங்கள ஊடகம் ஒன்றுக்குச் சிங்களத்தில் கொடுத்த நேர்காணல் பற்றிய வாதம், எதிர்வாதம் நின்ற பாடில்லை. Colombo Telegraph என்ற இணையதளத்தில் ததேகூ பேச்சாளர் சுமந்திரன் ததேகூ இல் இருந்து உடனடியாக விலக வேண்டும் (TNA Spokesperson Sumanthiran Should Resign From The TNA Immediately) என்ற தலைப்பில் மனோன்மணி சதாசிவம் ஒரு நீண்ட, நெடிய கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். கொழும்பு தெலிகிறாவ் என்ற இணையதளம் எல்லாவிதமான கருத்துக்களுக்கும் இடம் கொடுக்கும் ஒரு இணையதள ஊடகம். தமிழ்சார்பான, தமிழ் எதிர்ப்பான கட்டுரைகள், கருத்துக்கள் அதில் வெளிவரும். கட்டுரைகள் பற்றி எழும் விமரிசனத்துக்கு கட்டுப்பாடு எதுவும் கிடையாது என்று சொல்லலாம்.

மனோன்மணி சதாசிவம் பற்றிய அறிமுகத்தில் அவர் ஒரு சட்டத்தரணி என்றும் சிறிலங்கா, வவுனியா மாவட்ட மற்றும் வவுனியா குற்றவியல் நீதிமன்ற பதில் நீதிபதியாகவும் (Magistrate) இருப்பதாகச் சொல்லப்பட்டுள்ளது. மேலும் அவர் ஒரு மனிதவுரிமை செயற்பாட்டளர் என்றும் பல ஆட்கொணர்வு வழக்குக்களைத் தாக்கல் செய்தவர் என்றும் கூறப்பட்டுள்ளது.

இன்று யாராவது தன்னைப்பற்றி விளம்பரப்படுத்த விரும்பினால் அப்படிப்பட்ட ஒருவர் சுமந்திரனுக்கு எதிராக (1) அறிக்கை விட வேண்டும் (2) பகிரங்கக் கடிதம் எழுத வேண்டும் (3) அவரது கொடும்பாவியை எரிக்க வேண்டும். வேறு வழியில்லை.

மனோன்மணி அவர்கள் எழுதிய நீண்ட கட்டுரையில் சுமந்திரனுக்கு மனிதவுரிமை பற்றி ஒன்றுமே தெரியாது, பன்னாட்டுச் சட்டம் பற்றிய அறிவு அவருக்கு அறவே கிடையாது, அவருக்கு இனச் சுத்திகரிப்பு - இனப்படுகொலை இந்த இரண்டுக்கும் வித்தியாசம் தெரியாது, உண்மையில் அவர் எப்போதுமே கொழும்பைத் தளமாகக் கொண்ட ஒரு பண ஆசை கொண்ட வணிக வழக்கறிஞராக இருந்தார், வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழர்களின் வாழ்க்கையைப் பற்றி ஒருபோதும் அவர் கவலைப்பட்டது கிடையாது (In fact, he always remained a money-minded commercial lawyer based in Colombo and never cared about the lives of the Tamils in the North and East).

மனோன்மணி அவர்களது கருத்து அபத்தமானது. அருவருக்கத்தக்கது. அவரது மொழிநடை வெறுக்கத்தக்கது. சுமந்திரன் ஒரு வணிக வழக்கறிஞர் என்று சுயபுத்தியுள்ள எவனும் சொல்ல மாட்டான்.

மனோன்மணி தனது வாதத்துக்கு வலுச் சேர்க்கப் பலரது அறிக்கைகளை மேற்கோள் காட்டுகிறார். ஆனால் தமிழ்த் தேசியத் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன் விடுத்த அறிக்கையை அவர் வசதியாக இருட்டடிப்புச் செய்து விட்டார்.

சனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் மீது ஆயிரம் குற்றச்சாட்டுக்களை அடுக்கலாம். ஆனால் அவருக்குச் சட்டம் தெரியாது, பன்னாட்டுச் சட்டம் தெரியாது, வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழர்களின் வாழ்க்கையைப் பற்றி ஒருபோதும் அவர் கவலைப்பட்டது கிடையாது என்று குற்றம்சாட்டுக்கள் அடிப்படையில்லாதவை.

அரசியலமைப்பு தொடர்பான சிவில் வழக்குகள் பேசுவதில் சுமந்திரன் இன்ற முதல் இடத்தில் இருக்கிறார்.

சமந்திரன் 2015 இல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்களின் அமோக ஆதரவோடு நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர். யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 58,044 விருப்பு வாக்குகள் பெற்று மூன்றாவது இடத்தைப் பிடித்தவர். அவர் ததேகூ இல் இருந்து விலக வேண்டும் அல்லது வெளியேற்ற வேண்டும் என்பதில் பொருள் இல்லை.

இப்போது உச்ச நீதிமன்றம் விசாரிக்கும் சனாதிபதி கோட்டாபய இராசபக்சவின் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் வர்த்தமானி அறிவிப்பு, தேர்தல்கள் ஆணைக் குழுவின் யூன் 20 ஆம் திகதி பொதுத் தேர்தல் வர்த்தமானி அறிவிப்பு ஆகியவற்றுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஏழு அடிப்படை உரிமை மனுக்கள் மீதான விசாரணை நடைபெற்று வருகிறது. வழக்கு விசாரணை நாளை (வெள்ளிக்கிழமை) காலை 10 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. கடந்த 18 ஆம் திகதி முதல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட மனுக்கள் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான புவனேக அலுவிகாரே, சிசிடி அப்ரூ, பிரியந்த ஜயவர்தன, விஜித் மல்கொட ஆகிய ஐவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நடைபெற்று வருகிறது. எட்டாவது நாளாக இன்று காலை 10 மணியளவில் ஐவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டன. நேற்று (வியாழக்கிழமை) 3 மணி நேர விசாரணையை அடுத்து அது 8ஆவது தட வையாக நாளை வரை மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கை சட்டமா அதிபர் உட்பட ஏழு மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளார்கள். அதில் மனுதாரர்கள் சரிதா குணரத்தின மற்றும் விக்டர் ஐவன் சார்பாக சனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தோன்றி வாதாடி வருகிறார். கடந்த மே மாதம் 18 ஆம் திகதி இந்த வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சுமந்திரன்தான் தொடக்க வாதத்தை முன்வைத்தார். வழக்குகளின் விசாரணை முடிவில் தொகுப்புரையையும் சுமந்திரனே ஆற்ற இருக்கிறார்.

2018 ஒக்டோபர் 26 அன்று சனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதம மந்திரியைத் திடீரெனப் பதவி நீக்கி விட்டு அவருக்குப் பதிலாக, 2015 யனவரியில் இடம் பெற்ற சனாதிபதித் தேர்தலில் தன்னால் தோற்கடிக்கப்பட்ட, பரந்தளவில் முறைகேடுகளுடன் தொடர்புபட்ட முன்னாள் சனாதிபதி மகிந்த இராசபக்சவை நியமித்த போது இலங்கை ஒரு அரசியலமைப்பு ரீதியான நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது. அரசியல் கட்சிகளால் நாடாளுமன்றத்தில் ஒரு நம்பிக்கை வாக்கெடுப்புக் கோரிக்கை விடுக்கப்பட்டதும் சனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்து 2019 ஜனவரி 5 ஆம் திகதி புதிய தேர்தலை நடத்த அழைப்பு விடுத்தார். இந்நடவடிக்கைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் சம்பந்தன் தாக்கல் செய்த வழக்கில் அவர் சார்பாக சுமந்திரன் தோன்றி வாதிட்டார். நாடாளுமன்றத்தைக் கலைத்தது செல்லாது என உயர் நீதிமன்றம் ஒரு வாரலாற்றுப் புகழ்பெற்ற தீர்ப்பை வழங்கியது.

இந்த இரண்டு வழக்குகளுமே இன்று இலங்கையில் அரசியலமைப்பு தொடர்பான வழக்குகளில் சனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் ஒரு திறமையான வழக்கறிஞர் என்பதை எண்பித்துள்ளது.

இனி, சுமந்திரன் சிங்கள ஊடகவியலாளர் சமுதித்த (Chamuditha Samarawickrama) அளித்த நேர்காணல் பற்றிப் பார்ப்போம். இருபத்தொரு மணித்துளிகள் நீடித்த இந்த நேர்காணலில் சுமந்திரனிடம் பல கேள்விகள் கேட்கப்பட்டன.

சமுதித்த: தமிழ் தேசியக் கூட்டமைப்பை உருவாக்க முக்கிய காரணம் என்ன?

சமுதித்த: தமிழ் தேசிய கூட்டமைப்பு என்பது விடுதலைப் புலிகளின் அரசியல் பகுதியா?

சமுதித்த: தமிழ் தேசிய கூட்டமைப்பின் முதலாவது கூட்டத்தைக் கூட்டியவர் வேலுப்பிள்ளை பிரபாகரன்.

சமுதித்த: பிரபாகரன்தான் தமிழ் தேசியக் கூட்ட மைப்பை உருவாக்குகிறார். அதில் சம்பந்தன் அவர்கள் கலந்து கொள்கிறார்கள்.

சமுதித்த: நீங்கள் சொல்ல வருவது விடுதலைப் புலிகளின் தேவைகளுக்காக தமிழ் தேசியக்கூட்டமைப்பு உருவாகவில்லை என்றா?

சமுதித்த: தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவான போது 7 கட்சிகள் இருந்தன. இப்போது இருப்பது மூன்று மட்டுமே. புளொட் - டெலோ மற்றும் தமிழரசுக் கட்சி மட்டுமே இப்போது இருக்கின்றன.

சமுதித்த: ஆனந்தசங்கரி அவர்களும் இந்தக் கட்சியில் இருந்தார்கள். பாசிசவாதிகளோடு என்னால் தொடர்ந்து இருக்க முடியாது என்றே அவர் வெளியே சென்றார்.

சமுதித்த: விக்னேஸ்வரன் அவர்கள் வெளியேறி இருக்கிறார்கள். அனந்தி சசிதரன் அவர்கள் வெளியேறி இருக்கிறார்கள். அப்படி வெளியேறிய அனைவரும் உங்கள் மேல்தான் குற்றம் சுமத்துகிறார்கள்.

சமுதித்த: அவர்கள், உங்கள் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சியின் வாலில் தொங்க வைக்க முயற்சிக்கிறீர்கள் என்று சொல்கிறார்கள்.

சமுதித்த: சரியாக சொல்லுங்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பின் உண்மையான தலைவர் எம் ஏ சுமந்திரனா? அல்லது சம்பந்தனா?

சமுதித்த : சம்'டிஎன்பது இன்னொரு நாடு. சம்'டி என்றதும் நாடு பிரிந்தது என்றுதான் அர்த்தம்?

சமுதித்த - எம்.ஏ.சுமந்திரன் இனவாதியா?

இந்தக் கேள்விகளும் இதுபோன்ற கேள்விகளும் சுமந்திரனை ஒரு புலி முகவராகவும் இனவாதியாகவும் காட்ட கேட்கப்பட்ட கேள்விகளாகும்.

ஆனால் சர்ச்சைக்கு உள்ளான கேள்வி - பதில் பின்வருமாற அமைந்திருந்தது.

சமுதித்த: நீங்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக் கொள்கிறீர்களா?

சுமந்திரன்: இல்லை. நான் ஏற்றுக் கொள்ளவில்லை.

சமுதித்த: ஒரு போதும் ஏற்றுக் கொள்ளவில்லை

சுமந்திரன்: நான் இதை யாழ்ப்பாணத்திலும் சொல்லுகிறேன். ஏனைய பிரதேசங்களிலும் இதையே சொல்கிறேன். அதனால் எனக்கு எதிர்ப்புகள்



இருக்கின்றன. அவர் எங்களுக்காகத்தானே போராடினார்கள், ஏன் ஏற்றுக் கொள்கிறீர்கள் இல்லை என்று என்னோடு முரண்படுகிறார்கள். அதற்கு காரணம் நான் ஆயுதப்போராட்டம் ஒன்றை ஒருபோதும் ஆதரிப்பவன் அல்லன் என்பதுதான்.

இந்த இரண்டு கேள்விகளையும் அதற்கான பதில்களையும் படித்து விட்டுத்தான் சுமந்திரன் வி.புலிகளைக் கொச்சைப்படுத்திவிட்டார், ஆயுதப் போராட்டத்தை அவமதித்துவிட்டார் எனப் பலர் சன்னதம் ஆடினார்கள்.

ஒன்று இந்த நேர்காணல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்களோடு நடாத்தப்பட்ட கேள்விகளாகும். தமிழ் அரசுக் கட்சியின் அல்லது தமிழ்த் தேசியக் கட்சியின் பேச்சாளர் என்ற முறையில் சுமந்திரன் அறிமுகப்படுத்தப் படவில்லை.

நான் ஆயுதப்போராட்டம் ஒன்றை ஒருபோதும் ஆதரிப்பவன் அல்லன் என்பதுதான் சுமந்திரனின் நீண்டகால நிலைப்பாடு. அது அவரது தனிப்பட்ட கருத்துரிமை. போராட்டம் தவறு என்று அவர் சொல்லவில்லை. வி.புலிகளின் தியாகங்களை கொச்சைப் படுத்த முடியாது. கொச்சைப் படுத்தக் கூடாது. அவர்கள் தங்கள் உயிர்களைத் தங்களுக்காக அல்ல எங்களுக்குக்காக தியாகம் செய்திருக்கிறாகள். அதனை நான் மதிக்கிறேன். ஆனால் வாக்குப் பெறுவதற்காக பயன்படுத்த மாட்டேன். தமிழ் அரசுக் கட்சியின் நீண்டகால வரலாற்றில் எந்தச் சந்தர்ப்பத்திலும் வன்முறையை ஆதரித்தது கிடையாது. 1956 இல் தமிழ் அரசுக் கட்சித் தலைவர்கள், தொண்டர்கள் மீது சிங்களக் காடையர் தாக்குதல் நடத்தியபோது யாரும் திருப்பித் தாக்கவில்லை. தந்தை செல்வநாயகம் தமிழர்களது போராட்டங்கள் அறவழியில், அகிம்சைக் கோட்பாட்டுக்கு அமைய இருக்க வேண்டும் என்று சொன்னார். அதன் காரணமாகவே அவர் ''ஈழத்துக் காந்தி'' எனப் போற்றப்பட்டார்.

சுமந்திரனின் சிங்கள நேர்காணலை படித்துப் பார்த்துவிட்டு சம்பந்தன் என்ன சொன்னார்?

சுமந்திரன் வெளிப்படையாகவும் நேர்மையாகவும் (forthright and frank) செயற்பட்டுள்ளார் எனச் சொன்னார்.

"அகிம்சை வழியில் பற்றுறுதிகொண்டிருந்த தமிழ்த் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்துடன்
செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளையும், ஒப்பந்தங்களையும் பெரும்பான்மை இனத்
தலைவர்கள் அமுல்படுத்தத் தவறிமையே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உருவாவதற்கு
வழிவகுத்தது.

2009 ஆம் ஆண்டுவரை நீடித்த ஆயுதப் போராட்டக்
காலத்திலும்கூட அமைதிவழி தமிழர் போராட்டம் தொடர்ந்தது.

நீதிமற்றும் சமத்துவத்தின் அடிப்படையில் எதிர்காலம் எவ்வாறு அனைத்து மக்களுக்கும்
ஒளிமயமானதாக அமையக்கூடும் என்பதை இந்நாட்டு மக்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

நீதியானதும் ஏற்றுக்கொள்ளத் தக்கதுமான தீர்வொன்றையே தனது இறுதியான ஆர்வமாகக்
கொண்டுள்ள சுமந்திரன் அந்தக் கண்ணோட்டத்திலிருந்தே வினாக்களுக்கு
விடையளித்துள்ளார். சிலவிடயங்கள் மீது அவர் தனதுசொந்தக் கருத்துக்களையும்
வெளியிட்டுள்ளார்''

என இரா சம்பந்தன் தனது அறிக்கையல் குறிப்பிட்டுள்ளார். (https://www.colombotelegraph.com/index.php/sampanthan-defends-sumanthiran-says-sumanthiran-has-been-frank-and-forthright/)

இருபத்தேழு ஆண்டு கால அகிம்சைப் போராட்டம் வெற்றியளிக்கவில்லை. 26 ஆண்டு கால ஆயுதப் போராட்டமும் வெற்றியில் முடியவில்லை. எஞ்சியிருப்பது இராதந்திரப் போராட்டம். அதனை சம்பந்தன் - சுமந்திரன் கையில் எடுத்துள்ளார்கள்!

# வேணுகானவர்ஷினி கமலா சதாசிவம் அவர்கள் மறைந்தார்

இலங்கையின் முன்னணிப் புல்லாங்குழல் வாத்திய இசைக் கலைஞர் செல்வி. கமலாசதாசிவம் என்று அறியப்படும் கமலாதேவி சதாசிவம் 2020ஆம் ஆண்டு, மேமாதம், 26ஆம் திகதி கனடா தேசத்தில் ரொரன்ரோவில் காலமானார்.

1945ஆம் ஆண்டு, செப்டெம்பர் மாதம், 19ஆம் திகதி இலங்கையில் பிறந்த கமலா சதாசிவம் அவர்கள், காலம்சென்றவர்களான பொன்னம்பலம் சதாசிவம், திருமதி. பராசக்தி சதாசிவம் ஆகியோரின் புதல்வியும்,

சிவபரமானந்தன், ஞானதேவி, காலம்சென்ற பத்மநாதன், காலம்சென்ற சரோஜினிதேவி, மற்றும் மனோகரிதேவி, அருளநாதன் ஆகியோரின் சகோதரியுமாவார்.

கமலாசதாசிம் அவர்கள் 70-களிலும் 80-களிலும் கொழும்பில் பிரபலமான புல்லாங்குழல் வாத்திய இசைக்கலைஞராக விளங்கியவர். எழுபதுகளின் ஆரம்பத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கர்நாடக சங்கீத வாத்தியக் குழுவில் புல்லாங்குழல் இசைக்கலைஞராக இணைந்து கொண்ட செல்வி. கமலா சதாசிவம், பின்னர் தமிழ்ச்சேவையின் இசைப்பிரிவில் முக்கிய தயாரிப்பாளர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர்.



புல்லாங்குழல் வாத்தியத்தை இசைக்கும் கர்நாடக இசைக்கலைஞர்கள் மிக அரிதாக இருந்தஅந்தக் காலத்தில், பெண் புல்லாங்குழல் இசைக்கலைஞராகத் தனித்துவத்துடன் விளங்கியவர் கமலாசதாசிவம் அவர்கள்.

இலங்கைஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தெரிவு செய்யப்பட்ட புல்லாங்குழல் வாத்தியக் கலைஞராகப் பல வானொலி இசைக்கச்சேரிகளைக் கிரமமாகச் செய்து இசையுலகில் ஒரு தனியிடத்தைப்பெற்ற கமலாசதாசிவம் அவர்கள், அக்காலத்தில் கொழும்பு இசைமேடைகளில் புல்லாங்குழல் இசைக்கச்சேரிகளைச் செய்து வந்தார். கொழம்பில் இடம்பெற்ற பரதநாட்டிய நிகழ்ச்சிகளில் இவர் தவிர்க்கமுடியாத ஒரு கலைஞராக விளங்கினார்.

எண்பதுகளின் ஆரம்பத்தில் தனது புல்லாங்குழல் இசைக்கச்சேரியை இசைத்தட்டாக வெளியிட்ட கமலா சதாசிவம் அவர்கள், ரூபவாஹினித் தொலைக்காட்சியில் இடம்பெற்ற பல இசை, நடன, நிகழ்ச்சிகளில் தனது பங்களிப்பை வழங்கியிருக்கிறார்.

இசைத்துறையில் இவரது திறமையைப் பாராட்டி வேணுகானவர்ஷினி என்று பட்டமளித்து கௌரவிக்கப்பட்டவர் கமலா சதாசிம் அவர்கள். இவர் தனது இசைத் திறமையைப் பல பொதுச்சேவைகளுக்கு நிதி சேகரிப்பதற்காகப் பயன்படுத்தி உதவியிருக்கிறார். அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் இயங்கும் அனாதை இல்லங்கள் மற்றும் அன்னை திரேசா தொண்டுநிறுவனம் முதலியவற்றுக்கு நிதிசேகரிப்பதற்காக புல்லாங்குழல் இசைக்கச்சேரி செய்து உதவிய கமலா சதாசிவம் அவர்கள், இசைச்சேவையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டவர்.



கொழும்பில் ஆரம்பக்கல்வியை சென்ற்.கிளயர் மகளிர் கல்லூ ரியிலும் தொடர்ந்து இந்துமகளிர் கல்லூ ரியாகிய சைவமங்கையர் கழகத்திலும் தனது பள்ளிப்படிப்பை மேற்கொண்ட கமலா சதாசிவம் அவர்கள், மிகச்சிறு வயதிலேயே அப்போது சைவமங்கையர் கழகத்தில் இசையாசிரியராகப் பணியாற்றிய ஹரிகேஸ நல்லூர் சிறீ. இராமசாமி ஐயரிடம் புல்லாங்குழல் இசையைப் பயிலத் தொடங்கி அவரிடம் பிரத்தியேகமாகவும் படித்துத் தனது திறமையை வளர்த்து பதினாறாவது வயதில் முதல் மேடைக்கச்சேரி செய்து அனைவரது பாராட்டையும் பெற்றவர்.

தனது குடும்பத்தினர்மீது மிகுந்த பற்றுடைய கமலா சதாசிவம் அவர்கள், 1989ஆம் ஆண்டு கனடாவுக்குக் குடி பெயர்ந்தார். ரொரன்ரோவில் இசைக்கலைஞர்கள் மிகக் குறைவாக இருந்தகாலத்தில் அனுபவம் வாய்ந்த முக்கிய மூத்த கலைஞராகப் பலகச்சேரிகள், அரங்கேற்றங்கள் என்று ஓய்வில்லாது இயங்கினார். அத்தோடு ரொரன்ரோவில் இளைஞர்களுக்குக் கர்நாடக இசையில் ஆர்வத்தையும் அறிவையும் ஏற்படுத்துவதற்கெனப் பல விரிவுரைகளையும் பயிற்சிகளையும் வழங்கினார். ரொரன்ரோ இளைஞர்களுக்குப் புல்லாங்குழல் வாத்திய இசையைப் பயிற்றுவிப்பதற்காக சொந்தமாக ஒரு இசைப்பள்ளியை நடத்தி வந்த கமலா சதாசிவம் அவர்கள், இங்கு தொழில்பெறவேண்டி நிதித்துறையில் கல்விகற்று அத்துறையிலும் பணியாற்றினார்.

கர்நாடக இசைத்துறையில் ஒரு தனித்துவமான பெண் புல்லாங்குழல் வாத்திய இசைக்கலைஞராக இலங்கையிலும் கனட-ாவிலும் திகழ்ந்த கமலா சதாசிவம் அவர்கள், அமெரிக்க, ஐரோப்பிய, ஆபிரிக்க மற்றும் தென்கிழக்காசிய நாடுகள் பலவற்றுக்குச் சென்று இசைப்பணியாற்றியிருக்கிறார்.

கமலா சதாசிவம் அவர்கள், இசைத்துறையில் ஆற்றிய சாதனைகளும் சேவையும் போற்றுதற்குரியவை. இசைத்துறையில் தனக்கெனத் தனியான தடம் பதித்து மறைந்த வேணுகானவர்ஷினி கமலா சதாசிவம் அவர்களின் இசைச்சேவையை நினைவுகூர்ந்து அவரது ஆத்தம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக.

# மரண அறிவித்தல்

கொழும்பைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வசிப்பிடமாகவும் கொண்ட கமலாதேவி சதாசிவம் அவர்கள் 26-05-2020 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார், சதாசிவம் பராசக்தி தம்பதிகளின் அன்பு மகளும், சிவபரமானந்தன், ஞானதேவி, காலஞ்சென்றவர்களான பத்மநாதன், சரோஜினிதேவி மற்றும் மனோகரிதேவி, அருள்நாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், வீணா, ஜனனி, நிரஞ்சனா, ஜெயந்தி ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், சரண்யா, கிருஷ்ணா, கார்த்திகா, நந்தினி ஆகியோரின் அன்புச் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை மற்றும் தகனக் கிரியை ஆகியன நேற்று வியாழக்கிழமை கனடாவில் நடைபெற்றன..




இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்



தகவல்
குடும்பத்தினர்



செல்வி. கமலாதேவி சதாசிவம்

# மரண அறிவித்தல்



யாழ். இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடிப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வதிவிடமாகவும் கொண்ட குழந்தைவேலு திருநாவுக்கரசு அவர்கள் 27-05-2020 புதன்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற குழந்தைவேலு, அன்னம்மா தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்ற செல்லையா சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், ஞானம்மா அவர்களின் ஆருயிர்க் கணவரும், பூங்கோதை, புவனேஸ்வரி, மூர்த்தி, தேவன், சிவம், விஜயா, செந்து, கௌரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கணேசலிங்கம், குருபரன், கலா, ரேணுகா, சுஜாதா, பாஸ்கரன், சேந்தன், றமேஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சிவபொற்பாதசுந்தரம், கோபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தவமணி, லீலாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், தர்மலிங்கம், தியாகராஜா, குமாரசாமி, சண்முகம், அன்னம்மா, தங்கம்மா, பரமேஸ்வரி, கமலாம்பிகை, சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜதீஸ், நரேஸ், நந்தீஸ், கஜானி, லங்கீசன், தீபா, தாட்சாயினி, கௌதம், விதுரன், நிஷாந்தி, பவித்திரன், ஆத்மி, ஓவியன், விபிஷனா, பரா, பவித்திரா, மித்திரா, ஹரீஸ், விஸ்வா, அஸ்வின், சுதாகரன், ஸ்ரீகாந், பிரபாகரன், யாசோதா ஆகியோரின் அன்புப் பேரனும், அபிக்ஷான், சத்தியா, சன்விகா, ஆஸ்லியா, அர்சலன், லக்சுமி ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 28-05-2020 வியாழக்கிழமை அன்று 121 City View Drive, Etobicoke, ON M9W 5A8 இல் அமைந்துள்ள Lotus Funeral and Cremation Centre Inc. இல் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மலர்வு: 11-02-1936 இறப்பு: 27-05-2020

## திரு. குழந்தைவேலு திருநாவுக்கரசு

(இணுவில்)

தொடர்புகளுக்கு:

| | |
|---|---|
| மூர்த்தி (மகன்): | (647) 831-5449 |
| தேவன் (மகன்): | (416) 871-4292 |
| சிவம் (மகன்): | (416) 939-5713 |
| பூங்கோதை (மகள்): | (647) 717-3803 |
| றதி (மகள்): | 94 77 594 3387 |
| சேந்தன் (செல்வி, மகள்): | (905) 794-8145 |
| கௌரி (செல்வி, மகள்): | (647) 686-1770 |
| ரமேஷ் (மருமகன்): | (905) 410-1610 |

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு: 11-02-1936 இறப்பு: 27-05-2020



## திரு. குழந்தைவேலு திருநாவுக்கரசு

(இணுவில்)

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்டவரும் "ஐயா" என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்ட குழந்தைவேலு திருநாவுக்கரசு அவர்கள் இறைவனடி சேர்ந்து விட்டார்.


அன்னார் ஆலயத் தொண்டுகள் பல புரிந்து. மேலும் ஸ்காபுறோவில் இயங்கிவரும் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குரு மன்றத்தோடு தனது துணைவியார் சகிதம் ஆன்மீகம் சார்ந்த பணிகளில் மிகுந்த ஈடுபாட்டோடு தன்னை அர்ப்பணித்து வந்தார். ஆலயத்தில் கூடும் அனைத்து 'சக்தி'களோடும் மிகவும் அன்புடனும், பண்புடனும் பழகி, அனைவரின் உள்ளங்களையும் கவர்ந்தவர் எங்கள் 'ஐயா' அவர்கள். அன்னார் எம்மைத் தவிக்க விட்டு, இறைவனடி சேர்ந்த செய்தியினைக் கேட்டவுடன் அவர் முகத்தை பார்க்கும் சந்தர்ப்பம் இனி எமக்கு கிட்டாது என்று ஏங்கித் தவிக்கின்றோம்.

ஆதிபராசக்தி குரு மன்ற சக்திகள்

Markham / Nashdene

# கோவிட்-19 பரவலைத் தடுக்க நாம் ஒன்றாக இணைந்து மாற்றத்தை உருவாக்குகிறோம்

வணிகங்களும் பணியிடங்களும் மீண்டும் திறக்கப்படுகையில், நாம் அனைவரும் தொடர்ந்து அனைவரின் பாதுகாப்புக்காக நமது பங்களிப்பை அளிக்கவேண்டும்.




சமூக இடைவெளியைக் கடைபிடிப்போம். மற்றவர்களிடமிருந்து இரண்டு மீட்டர்கள் தள்ளியிருப்போம்



உடல்ரீதியான இடைவெளி கடினமாக இருந்தால், முகக்காப்பு அணிவோம்



கைகளை நன்றாகவும் அடிக்கடியும் கழுவுங்கள்

மேலும் விபரங்களுக்கு **ontario.ca/coronavirus** தளத்துக்கு வருகை தருக

ஒன்டாரியோ அரசாங்கத்திற்காக ஒன்டாரியோ அரசாங்கத்தால் வழங்கப்பட்டது

Ontario

# 3 இலட்சம் ரூபா லஞ்சம் பெற்றபோது கைது செய்யப்பட்ட ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் லவநாதன்



வீதி நிர்மாண ஒப்பந்தகாரரிடமிருந்து 3 இலட்சம் ரூபா லஞ்சம் பெற்றபோது கைது செய்யப்பட்ட ஆலையடிவேம்பு பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் பிரதேச செயலாளர் உட்பட இருவரையும் எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம் ஹம்ஸா இன்று வியாழக்கிழமை உத்தரவிட்டார்.

அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் "சப்ரிகம" அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ், அம்பாறை ஆலையடிவேம்பு பிரதேசத்தில் தலா 20 இலச்சம் ரூபா வீதம் ஓதுக்கப்பட்ட 3 வீதிகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தமொன்றினை அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒப்பந்தக்காரர் ஒருவர் பெற்றுள்ளார்.

இந்த வீதி நிர்மாணத்தை அமுலாக்கும் பொறுப்பு, ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் மேற்படி ஒப்பந்தகாரர் பெற்றுள்ள ஒவ்வொரு வீதிக்கும் தலை ஒரு லட்சம் ரூபா வீதம் 03 லட்சம் ரூபாவை லஞ்சமாக வழங்க வேண்டுமென ஆலையடி ஆவம்பு பிரதேச செயலாளர் கோரியுள்ளார்.

அதேவேளை பணம் கிடைக்கும் வரை, அந்த வீதி நிர்மாண வேலையை ஆரம்பிப்பதற்கான அனுமதியை பிரதேச செயலக தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு வழங்காமல் பிரதேச செயலாளர் இழுத்தடித்து வந்துள்ளதாகவும் இந்தப் பின்னணியிலேயே தன்னிடம் பிரதேச செயலாளர் லஞ்சம் கே-ாரும் விடயத்தை, குறித்த ஒப்பந்தக்காரர் கொழும்பிலுள்ள லஞ்ச, ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளுக்கு அறிவித்தார்.

இதனையடுத்து பிரதேச செயலாளர் லஞ்சம் வாங்கும் போது அவரை கையும் மெய்யுமாகப் பிடிப்பதற்காக சில நாட்களுக்கு முன்னர் கொழும்பிலிருந்து லஞ்ச, ஊழல் ஆணைக்குழுவைச் சேர்ந்த 06 பேர் கொண்ட குழுவினர் அம்பாறை மாவட்டத்துக்கு வந்து தங்கிநின்று குறித்த ஒப்பந்தகாரரிடம் ஆலோசனைகளை வழங்கிய நிலையில்

சம்பவதினமான நேற்று 28ம் திகதி வியாழக்கிழமை லஞ்ச ஊழல் ஆணைக்குழு கொண்டு வந்த 03 லட்சம் ரூபா பணத்தை, குறித்த ஒப்பந்தக்காரரிடம் கொடுத்த பிரதேச செயலாளர் லவநாதனுக்கு அதனை வழங்குமாறு கூறியுள்ளனர்.

அந்த நிலையில் ஒப்பந்தகாரர் பிரதேச செயலாளரை தொலை பேசியில் தொடர்பு கொண்டு பணம் வழங்குவது தொடர்பாக பேசிய நிலையில் பிரதேச செயலாளர் லவநாதன் பணத்தைப் பெற்றுக் கொள்ளாமல், அதனை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் உதய குமாரிடம் வழங்குமாறு, ஒப்பந்தக்காரருக்கு தொலைபேசியில் தெரிவித்துள்ளார் .

இதற் கிணங்க, பிரதேச செயலகத்துக்கு ஒப்பந்தக்காரருடன் சாதாரண நபர்போல் ஆடையணிந்த லஞ்ச, ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளும் சென்று, மூன்று லட்சம் ரூபா பணத்தையும் ஒபபந்தக்காரரிடம் இருந்து உதவித் திட்டமிடல் பணிப்பாளர் உதயகுமார் பெற்றபோது, அவரை லஞ்ச, ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் கையும் மெய்யுமாகப் பிடித்து கைது செய்ததுடன் பிரதேச செயலாளர் லவநாதனையும் கைது செய்துள்ளதாக பொலிசாரரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.


பல்கலாச்சார ஊடகங்களுக்கு நிதி வழங்க வேண்டுமென NDP கட்சி வலியுறுத்துகிறது.

இதுவரை காலமும் அரசாங்கம் பல்கலாச்சார ஊடகங்களுக்கு நிதியுதவி வழங்கவில்லை. அவற்றுக்கு நிதியுதவி செய்வதன் மூலம்> அவையும் அம்மொழி மக்களுக்கான செய்திகளையும் தகவல்களையும் எடுத்துச் செல்ல முடியும். இவ்வுதவித் தொகை வழங்கப்படும் வரை NDP கட்சியும் அதன் உறுப்பினர்களும் தொடர்ந்து அதற்காக போராடும்.



Andrea Horwath
Leader, Ontario NDP
Ontario NDP NPD de l'Ontario



PREMIER DIAGNOSTIC NETWORK
PDXN
Tel: 888-988-7396 | www.pdxn.ca

RADIOLOGY AND CARDIOLOGY SERVICES

- X-Ray
- Ultrasound
- Bone Density
- Echocardiogram
- Holter Monitor
- Stress ECG
- ABPM (24h Blood Pressure Monitoring)







LOCATIONS




Marksteeles Medical Imaging
(South of Markham & Steeles - Blue Bldg.)
3341 Markham Road, Unit B124
Scarborough, ON M1X 0V5
Tel: 647-341-0183 Fax: 647-341-0184

Bellsmere Medical Diagnostic Centre
(North of Ellesmere & Bellamy)
1920 Ellesmere Road, Suite 311
Scarborough, ON M1H 2V6
Tel: 416-289-2280 Fax: 416-289-7321

Brimley Medical Diagnostic Centre
(South of Brimley & Sheppard)
2020 Brimley Road
Scarborough, ON M1S 4R7
Tel: 416-299-7677 Fax: 416-299-7948

ACCREDITATIONS

Cardiac Echo Quality Care and Service by: CorHealth Ontario
Radiology Medical Quality and Standard of Care by: The College of Physicians and Surgeons of Ontario
Affiliated Clinical Site: UHN University Health Network; The Michener Institute of Education at UHN
Accredited Ultrasound Training Program : Accreditation Canada
Infection Control and Cleaning Process by : Public Health Ontario

Funded by
Ontario Ministry of Health & Long Term Care





Preparation of Income Taxes T1 and T2 with E/File

Location :
Unit 9- 40 Winges Road
Woodbridge, ON
L4L 6B2

Pearl Fortune Canada
Head Office
101 Laird Drive, Markham,
Ontario L3S 3N6
Office Number 905-554-5606
Fax Number 905-554-3236



Please contact:
Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993

# எமக்கு ஒரு சந்தர்ப்பத்தினை கொடுங்கள் நாங்கள் செய்து காண்பிக்கின்றோம் என்கிறார் காண்டீபன்

யாழ்ப்பாணத்திலிருந்து எழிலன்



சுமந்திரனுக்கே பாதுகாப்புக்கு ஆயுதப்படை வேண்டுமென்றால் சுமார் 70 வருடங்களுக்கு மேலாக சிங்களவர்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு பாதுகாப்பளிக்க, ஆயுதம் தாங்கிய பிரபாகரன் அவர்களும் அவரது போராளிகளின் படையும் தேவைப்பட்டாரகள். சிங்களவர்களிடம் இருந்து தம்மை பாதுகாக்க தமிழர்களுக்கு இந்தப் படை பெரிதும் உதவியது என்பதே உண்மை.

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் பேச்சாளரும் சட்டத்தரணியுமான காண்டீபன் யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார்.

தமிழ்தேசிய கூட்டமைப்பு மற்றும் சுமந்திரன் போன்ற அதன் உறுப்பினர்கள் ஆகியவை தொடர்பாக பத்திரிகையாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்

□தமிழ்தேசிய கூட்டமைப்பு கடந்த நான்கரைவருடங்களாக மைத்திரிபால சிறிசேனாவை நெல்சன்மண்டேலாகவும், மகாத்மா காந்தியாகவும் சொல்லிக்கொண்டு இருந்தது, ஒரு இடைக்கால வரைவையும் கொண்டுவந்திருந்தது. நல்லிணக்க அரசுடன் கைகோத்திரிந்த இந்த காலத்தில் அரசியல் தீர்வையோ, அரசியல் கைதிகள் விடுவிப்பு போன்று எதனையும் சாதிக்கவில்லை. சகல அதிகாரங்களையும் அடையக் கூடிய இடத்தில் இருந்தும் எதனையும் அடையவில்லை.

மகிந்தவை சந்தித்தது பற்றி கூட்டமைப்பு, அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பாக பேசியதாக அறிக்கை விட்டுள்ளது. கடந்த ஆண்டுகளாக இணக்க அரசியல் செய்தபோதும் தீர்வை காணமுடியதவர்கள் இன்று மீண்டும் மகிந்தவிடம் செல்வதன் நோக்கம் மீண்டும் அடுத்த ஐந்து ஆண்டுகள் கோத்தய ராஜபக்ச அரசை காப்பாற்றி, குற்றவியல் நீதிமன்றில் இருந்தும் காப்பாற்றுவதற்கே ஆகும் சம்பந்தன் எதிர்க்கட்சி தலைவராக்கிய சிங்கள தலைமை ஐக்கிய நாடுகள் சபையில் போய் சொல்லுகின்றது தமிழர் ஒருவருக்கு எதிர்க்கட்சி தலைமை கொடுத்துள்ளோம் இதன் மூலம் நல்லிணக்கம் ஏற்படுத்தி இருக்கின்றோம் என்று மங்கள சமரவீர கூறினார்.

நாங்கள் ஆசனங்களுக்கு ஆசைப்பட்டவர்களாக இருந்திருந்தால் கடந்த பத்து ஆண்டுகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்திருந்தாலே ஆசனங்களை பெற்றிருக்கலாம். நாம் நாடாளுமன்ற கதிரைகளை சூடாக்கும் அரசியலை எமது மக்களுக்கு என்றுமே செய்ய தயாராக இல்லை.

அனைத்துலக சாசனங்களில் கைச்சாத்திட்ட சிங்கள அரசு கொத்துகுண்டுகளையும், பொஸ்பரஸ் குண்டுகளையும் வீசி கொத்து கொத்தாக இனப்படுகொலை செய்து. ஆனால் சுமந்திரனோ இனப்படுகொலை செய்யவில்லை என்று வாதாடுகின்றார்.

ஐக்கிய நாடுகள் சபை தீர்மானத்திலேயே குறிப்பிடப்பட்டிருந்த அரசியல் கைதிகள் விடுதலை என்பதே நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதற்கு முற்றிலும் மாறாக மிருசுவிலில் படுகொலை செய்து நீதி மன்றில் மரணதண்டனை கொடுக்கப்பட்ட இராணுவ அதிகாரி கோத்தய பாய ராஜபக்கசாவினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார். அமெரிக்க காங்கிரசுக்கு ஸ்ரேற் டிப்பாட்மென் (ளுவயவந னநியசவஅநவெ) அனுப்பிவைத்த அறிக்கையில் 2009 தை தொடக்கம், மே வரையாக நடைபெற்ற சம்பங்களை பட்டியலிட்டதோடு, அங்கு நடைபெற்ற படுகொலைக்கு சவேந்திர சில்வா தான் பொறுப்பாளர் என்ற தரவுகளை கொடுத்திருந்தது. இராணுவத்தளபதியாக இருந்து பல குற்றங்களை செய்துள்ளார். எனவே இவருக்கு பயணத்தடை செய்கின்றோம் என்று காங்கிரஸ் தற்போது தெரிவித்துள்ளது.

இனப்படுகொலை செய்த அரசை சர்வதேச நீதி மன்றில் நிறுத்து இருந்தால், அரசியல் தீர்வும், கைதிகள் விடுதலையும் இலகுவாகிவிடும். ஆனால் கூட்மைப்பு சிங்கள அரசுடன் கைகோத்து கொண்டு கால இழுத்தடிப்பையே செய்கின்றது. இதனால் காணாமாலக்கபட்டோரின் உறவுகள் பல இன்று இறந்து போய்விட்டனர். இதனால் நேரடிச்சாட்சியங்கள் இல்லாமல் போய்விட்டது. இந் நிலை தொடர்ந்தால் சாட்சிகள் நிலமை கேள்விக்குறி ஆகக் கூடிய கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் நீதி பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி, எனவே எங்களுடைய மக்களுக்கு இழைக்கபட்ட அநீதியை பதினாறு பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒற்றை குரலில் கூறினால் சர்வதேசம் அதனை செவிசாய்க்கும். அத்துடன் அந்த உறுப்பினர்களின் ஆதரவு அரசுக்கு தேவையென்றால், எமது அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், அரசியல் தீர்வை பெறுதல் போன்றவற்றினை நிபந்தனை வைத்து அரசுக்கு அழுத்தினை கொடுப்போம்.

ஆயுத வன்முறையை தனக்கு பிடிக்காது என்று கூறும் சுமந்திரன், தனக்கு பாதுகாப்பில்லை என்று ஆயுதப்படையை தனது பாதுகாப்பிற்கு வைத்துள்ளார். சொந்த மக்களிடம்

செல்லவே தனக்கு உயர் அச்சுறுத்தல் இருக்கின்றது என்பதற்காக ஆயுதப்படை பாதுகாப்பை வைத்திருக்கும் சுமந்திரன்.

சுமந்திரனுக்கே பாதுகாப்புக்கு ஆயுதப்படை வேண்டுமென்றால் சுமார் 70 வருடங்கள் சிங்களவர்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ஆயுதம் தூக்கிய பிரபாகரன் தேவைப்பட்டார் சிங்களவர்களிடம் இருந்து தம்மை பாதுகாக்க.

ஆறாவது திருத்தச்சட்டம் பிழையானது அது ஒடுக்குமுறைச் சட்டம் என்று வெளிநாடுகளே கூறிவிட்டது. விடுதலைப்போராட்டம் மௌனிக்கபட்டு பத்து வருடங்கள் கடந்த நிலையில் பதவியில் இருந்த கூட்டமைப்பு தமிழர்களுக்கு எதனையும் செய்யவில்லை. எனவே எங்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தினை கொடுங்கள் நாங்கள் செய்து காண்பிக்கின்றோம் என்று மக்களிடம் வேண்டி நிற்கின்றோம்□ என்றார் திரு காண்டீபன் அவர்கள்.




# அன்பின் தொனி - 562

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை**

**எனக்கு உண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன்.**

என் பெலனாகிய கர்த்தாவே, உம்மில் அன்புகூருவேன். கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகரும் என் தேவனும், நான் நம்பியிருக்கிற என் துருகமும், என் கேடகமும், என் இரட்சணியக் கொம்பும், என் உயர்ந்த அடை க்கலமுமாயிருக்கிறார். துதிக்குப் பாத்திரராகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவேன், அதனால் என் சத்துருக்களுக்கு நீங்க லாகி இரட்சிக்கப்படுவேன். மரணக்கட்டுகள் என்னைச் சுற்றிக்கொண்டது, துர்ச்சனப்பிரவாகம் என்னைப் பயப்படுத்தினது. பாதாளக்கட்டுகள் என்னைச் சூழ்ந்துகொண்டது, மரணக்கண்ணிகள் என்மேல் விழுந்தது. எனக்கு உண்டான நெருக்க த்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, என் தேவனை நோக்கி அபயமிட்டேன், தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார், என் கூப்பிடுதல் அவர் சந்நிதியில் போய், அவர் செவிகளில் ஏறிற்று. அப்பொழுது பூமி அசைந்து அதிர்ந்தது, அவர் கோபங்கொண்டபடியால் பர்வதங்களின் அஸ்திபாரங்கள் குலுங்கி அசைந்தது. அவர் நாசியிலிருந்து புகை எழும் பிற்று, அவர் வாயிலிருந்து பட்சிக்கிற அக்கினி புறப்பட்டது, அதனால் தழல்மூண்டது. வானங்களைத் தாழ்த்தி இறங்கி னார், அவர் பாதங்களின்கீழ் காரிருள் இருந்தது. கேருபீன்மேல் ஏறி வேகமாய்ச் சென்றார், காற்றின் செட்டைகளைக் கொண்டு பறந்தார். இருளைத் தமக்கு மறைவிடமாக்கினார், கரும்புனல்களையும், ஆகாயத்துக் கார்மேகங்களையும் தம் மைச் சூழக்கூடாரமாக்கினார். அவருடைய சந்நிதிப் பிரகாசத்தினால் அவருடைய மேகங்கள் பறந்து விலகிற்று, கல்மழை யும் நெருப்புத்தழலும் விழுந்தது. கர்த்தர் வானங்களிலே குமுறினார், உன்னதமானவர் தமது சத்தத்தைத் தொனிக்கப் பண்ணினார், கல் மழையும் நெருப்புத்தழலும் விழுந்தது. தம்முடைய அம்புகளை எய்து, அவர்களைச் சிதறடித்தார், மின்னல்களைப் பிரயோகித்து, அவர்களைக் கலங்கப்பண்ணினார். அப்பொழுது கர்த்தாவே, உம்முடைய கண்டிதத்தினா லும் உம்முடைய நாசியின் சுவாசக்காற்றினாலும் தண்ணீர்களின் மதகுகள் திறவுண்டு, பூதலத்தின் அஸ்திபாரங்கள் காணப்பட்டது. உயரத்திலிருந்து அவர் கைநீட்டி, என்னைப் பிடித்து, ஜலப்பிரவாகத்திலிருக்கிற என்னை தூக்கிவிட்டார். என்னிலும் அதிக பலவான்களாயிருந்த என் பலத்த சத்துருவுக்கும் என்னைப் பகைக்கிறவர் களுக்கும் என்னை விடுவித் தார். என் ஆபத்துநாளில் எனக்கு எதிரிட்டு வந்தார்கள், கர்த்தரோ எனக்கு ஆதரவாயிருந் தார். அவர் விசாலமான இடத்திலே என்னைக் கொண்டுவந்து, என்மேல் பிரியமாயிருந்தபடியால், என்னைத் தப்புவித்தார். **- சங்கீதம் 18: 1-19**

**என் வழியைச் செவ்வைப்படுத்துகிறவர் தேவனே.**

கர்த்தர் என் நீதிக்குத்தக்கதாக எனக்குப் பதிலளித்தார், என் கைகளின் சுத்தத்திற்குத்தக்கதாக எனக்குச் சரிக்கட்டி னார். கர்த்தருடைய வழிகளைக் கைக்கொண்டுவந்தேன், நான் என் தேவனுக்குத் துரோகம்பண்ணினதில்லை. அவருடைய நியாயங்களையெல்லாம் எனக்கு முன்பாக நிறுத்தினேன், அவருடைய பிரமாணங்களை நான் தள்ளிப்போடவில்லை. அவர் முன்பாக நான் மனவுண்மையாயிருந்து, என் துர்க்குணத்துக்கு என்னை விலக்கிக்காத்துக்கொண்டேன். ஆகையால் கர்த்தர் என் நீதிக்கும், தம்முடைய கண்களுக்கு முன்னிருக்கிற என் கைகளின் சுத்தத்திற்கும் தக்கதாக எனக்குப் பலனளித்தார் தயவுள்ளவனுக்கு நீர் தயவுள்ளவராகவும், உத்தமனுக்கு நீர் உத்தமராகவும், புனிதனுக்கு நீர் புனிதராகவும், மாறுபாடுள் ளவனுக்கு நீர் மாறுபடுகிறவராகவும் தோன்றுவீர். தேவரீர் சிறுமைப்பட்ட ஜனத்தை இரட்சிப்பீர், மேட்டிமையான கண்களை தாழ்த்துவீர். தேவரீர் என் விளக்கை ஏற்றுவீர், என் தேவனாகிய கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குவார். உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்துபோவேன், என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன். தேவனுடைய வழி உத்தமமா னது, கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டது, தம்மை நம்புகிற அனைவருக்கும் அவர் கேடகமாயிருக்கிறார். கர்த்தரையல் லாமல் தேவன் யார்? நம்முடைய தேவனையன்றிக் கன்மலையும் யார்? என்னைப் பலத்தால் இடைகட்டி, என் வழியைச் செவ்வைப்படுத்துகிறவர் தேவனே. அவர் என் கால்களை மான்களுடைய கால்களைப்போலாக்கி, என்னுடைய உயர்தலங் களில் என்னை நிறுத்துகிறார். வெண்கல வில்லும் என் புயங்களால் வளையும்படி, என் கைகளை யுத்தத்திற்குப் பழக்கு விக்கிறார். உம்முடைய இரட்சிப்பின் கேடகத்தையும் எனக்குத் தந்தீர், உம்முடைய வலதுகரம் என்னைத் தாங்குகிறது, உம்முடைய காருணியம் என்னைப் பெரியவனாக்கும். என் கால்கள் வழுவாதபடிக்கு, நான் நடக்கிற வழியை அகலமாக் கினீர். என் சத்துருக்களைப் பின் தொடர்ந்து, அவர்களைப் பிடிப்பேன், அவர்களை நிர்மூலமாக்கும் வரைக்கும் திரும்பேன். அவர்கள் எழுந்திருக்கமாட்டாதபடிக்கு, என் பாதங்களின்கீழ் விழத்தக்கதாக அவர்களை வெட்டினேன். யுத்தத்திற்கு நீர் என்னைப் பலத்தால் இடைகட்டி, என்மேல் எழும்பினவர்களை என் கீழ் மடங்கப்பண்ணினீர். நான் என் பகைஞரைச் சங்கரிக்கும்படியாக, என் சத்துருக்களின் பிடரியை எனக்கு ஒப்புக்கொடுத்தீர். அவர்கள் கூப்பிடுகிறார்கள், அவர்களை இரட்சிப்பார் ஒருவருமில்லை, கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள், அவர்களுக்கு அவர் உத்தரவு கொடுக்கிறதில்லை. நான் அவர்களைக் காற்றுமுகத்திலே பறக்கிற தூளாக இடித்து, தெருக்களிலுள்ள சேற்றைப்போல் அவர்களை எறிந்துபோடு கிறேன். ஜனங்களின் சண்டைகளுக்கு நீர் என்னைத் தப்புவித்து, ஜாதிகளுக்கு என்னைத் தலைவனாக்குகிறீர், நான் அறியாத ஜனங்கள் என்னைச் சேவிக்கிறார்கள். அவர்கள் என் சத்தத்தைக் கேட்டவுடனே எனக்குக் கீழ்ப்படிகிறார்கள், அந்நியரும் எனக்கு இச்சகம்பேசி அடங்குகிறார்கள். அந்நியர் முனைவிழுந்துபோய், தங்கள் அரண்களிலிருந்து தத்தளிப் பாய்ப் புறப்படுகிறார்கள். கர்த்தர் ஜீவனுள்ளவர், என் கன்மலையானவர் துதிக்கப்படுவாராக, என் இரட்சிப்பின் தேவன் உயர்ந்திருப்பாராக. அவர் எனக்காகப் பழிக்குப் பழிவாங்கி, ஜனங்களை எனக்குக் கீழ்ப்படுத்துகிற தேவனானவர். அவரே என் சத்துருக்களுக்கு என்னை விலக்கி விடுவிக்கிறவர், எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள்மேல் என்னை நீர் உயர்த்தி, கொடுமையான மனு'னுக்கு என்னைத் தப்புவிக்கிறீர். இதினிமித்தம் கர்த்தாவே, ஜாதிகளுக்குள்ளே உம்மைத் துதித்து, உம்முடைய நாமத்திற்குச் சங்கீதம் பாடுவேன். தாம் ஏற்படுத்தின ராஜாவுக்கு மகத்தான இரட்சிப்பை அளித்து, தாம் அபிஷேகம்பண்ணின தாவீதுக்கும் அவன் சந்ததிக்கும் சதாகாலமும் கிருபை செய்கிறார். **- சங்கீதம் 18: 20-50**

**கிறிஸ்து இயேசுவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே!**

கொறொனா வைரஸ் (Covid 19) தாக்கதினால் பாதிக்கப்பட்டு மரித்துப்போன சகல மக்களுடைய குடும்ப அங்கத்தவர் களுக்காகவும், குறிப்பாக எமது தமிழ் மக்களும் அநேகர் மரித்திருக்கிறார்கள், அவர்கள் அனைவரின-தும் குடும்பங்களை ஆற்றித், தேற்றி ஆறுதல் படுத்த எமது ஆண்டவரும் இரட்சகருமான இயேசுவிடம் வேண்டி நிற்கிறோம்.

**மேலதிக ஜெப தேவைகளுக்கு தொடர்பு: (647) 271-7645**

**தொடரும்...**

---

பயணத் தொடர் - பகுதி-30

# பனி பொழியும் தேசத்தில் பத்து நாட்கள்

(முனைவர் வே, சங்கரநாராயணன், சேலம், தமிழ்நாடு)



கனடாவில் நான் பங்கு பெற வேண்டிய நிகழ்ச்சிகள் ஓரளவுக்கு அக்டோபர் 7ம் தேதியோடு நிறைவை எட்டின. 9ம் தேதி மாலை விமானத்தில் தமிழகம் திரும்ப வேண்டும். இடையில் 8ம் தேதி ஒரு நாள் உள்ளது. அந்தத் தேதியில் நிகழ்வுகள் எதுவும் இல்லை. கனடாவின் சில முக்கியத் தமிழ் பிரமுகர்களை நேரில் சந்தித்து நான் நன்றி கூறி விடைபெறுவதற்காக அந்த 8ம் தேதியில் வேறு நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யப்படவில்லை. அப்படி நான் சந்திக்கவிருந்த முக்கிய பிரமுகர்களின் முக்கியமான ஒருவர் திரு. சங்கர் நல்லதம்பி.

றொரன்ரோவில் 400 பெருந்தெரு மற்றும் பின்ச் மேற்கு வீதி ஆகியவை சந்திக்கும் இடத்திற்கு அருகில் அமைந்துள்ளது பெஸ்ட் வெஸ்டர்ன் பிளஸ் என்ற நார்த் யோர்க் ஹோட்டல் இந்த ஹோட்டலை சொந்தமாக நிர்வகித்து வருபவர் கனடிய தமிழ் மக்கள் மத்தியில் நன்கு அறியப்பெற்ற வர்த்தக முயற்சியாளர் சங்கர் நல்லதம்பி அவர்கள். கனடாவில் என்னை மிகவும் கவர்ந்த ஒரு அம்சம் அங்குள்ள விடுதிகளில் காணப்பட்ட ஆரோக்கியமும் சுகாதாரமும் மிக்க அறைகள் தான். அங்கு தங்குபவர்கள் அதை விடுதி அறைகளாகப் பார்க்காமல், வீட்டு அறைகளாகப் பார்க்கிறார்கள். இங்கிருப்பது போல காலி மது பாட்டில்கள், காலி தண்ணீர் பாட்டில்கள், வீசியெறியப்பட்ட துண்டு சிகரெட்டுகள், சிதறிக் கிடக்கும் உணவுத் துணுக்குகள், அலங்கோலமாகிக் கிடைக்கும் கட்டில் விரிப்புகள், பாலிதீன் பைகள் இவைகளை விடுதி அறைகளில் அப்படி அப்படியே விட்டு விட்டு வரும் மனோபாவம் அந்த மக்களிடம் இல்லை. இந்தியாவில் 80 சதவிகித விடுதிகள் வியாதிகளின் உற்பத்திக் களங்களாகவே மாறிவிட்டன. இது போன்ற சூழ்நிலை கனடாவில் இல்லை அதிலும் பெஸ்ட் வெஸ்டர்ன் போன்ற நட்சத்திர ஹோட்டல்கள் அழகும் ஆரோக்கியம் தவழும் இல்லங்களாக இருக்கின்றன. பிரபல வர்த்தகப் பிரமுகரும் உதயன் விழாக்கள் அனைத்திற்கும் ஆதரவு வழங்கி வருபவருமான சங்கர் நல்லதம்பி அவர்களை அவரது பெஸ்ட் வெஸ்டர்ன் பிளஸ் ஹோட்டல் வளாகத்தில் சந்தித்து நன்றி கூறி விடை பெறுவதற்காக நான், நண்பர் லோகேந்திரலிங்கம், மொன்றியால் வாழ் எழுத்தாளர் திரு. வீணைமைந்தன் சண்முகராஜா உடன் நண்பகல் வேளையில் ஹோட்டலுக்குச் சென்றேன். அகன்று உயர்ந்து, அனைத்து நவீன வசதிகளையும் உள்ளடக்கிய அந்த ஹோட்டல் அமைப்பு அழகான தோற்றத்துடன் மிளிர்ந்தது. ஆனால் அதை விட அழகான உள்ளம் உடையவர் அன்பு நண்பர் சங்கர் நல்லதம்பி. கனடாவில் நான் பங்கு கொண்ட ஒரு சில நிகழ்வுகளில் அவரை நான் சந்தித்து உரையாடியிருந்தாலும் அவரைப் பற்றிய பல செய்திகளை பின்னர் தான் அறிந்து கொண்டேன்.

உலகமே பொருளை நோக்கித் தான் ஓடிக் கொண்டிருக்கிறது. எழுதுவது, பேசுவது, படிப்பது, நடப்பது, நடிப்பது, ஓடுவது, உழைப்பது, பயணப்படுவது அத்தனைக்கும் பின்னால் பொருள் தான் காரணமாக, ஆதாரமாக இருக்கிறது. அதனால் தான் அதைப் பொருளாதாரம் என்றே போற்றுகிறோம். ஆனால் பொருள் ஈட்டுவது மட்டுமல்ல வாழ்க்கை - ஈட்டிய பொருளை எப்படிச் செலவளிக்கிறோம் என்பதில் தான் உண்மையான வாழ்க்கை ஒளிந்து கொண்டிருக்கிறது. வாழ்வதற்குப் பொருள் வேண்டும். அதே சமயம் வாழ்வதிலும் பொருள் வேண்டும். பாடுபட்டு ஈட்டுகின்ற பொருளை அடுக்கி வைத்து அழகு பார்ப்பதில் அடையும் ஆனந்தத்தை விட, அதை அடுத்தவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்து, அவர்களது முக மலர்ச்சியை பார்ப்பதால் கிடைக்கின்ற ஆனந்தம் எல்லையற்றது. இதனை "ஈத்துவக்கும் இன்பம்" என்று திருவள்ளுவர் கூறுகின்றார். அந்த ஈத்துவக்கும் இன்பத்தை நண்பர் சங்கர் நல்லதம்பியிடம் நான் பார்த்தேன். புலம் பெயர் தமிழ் சமூகம் அவரை அதிகமாக நேசிக்க அதுவே காரணம். திருவாசகத்தின் திருவெம்பாவையில் "சித்தம் அழகியார்" என்றொரு வாசகம் வருகிறது. உடலை அழகு படுத்த ஒப்பனை சாதனங்கள் ஓராயிரம் உலகத்தில் உண்டு. ஆனால் சித்தத்தை அழகு படுத்துவது எப்படி? ஈகையும் கருணையும் தான் இதயத்தை அழகு படுத்தும். சித்தத்தை செம்மைப் படுத்தும். கருணை உள்ளவர் உள்ளம் - அது கடவுள் வாழும் இல்லம். மனிதர்கள் தங்குவதற்கு ஹோட்டல் அறைகளை வழங்கும் சங்கர் நல்லதம்பி இதய அறையை இறைவனுக்கு வழங்கியுள்ளார். அதனால்தான் அவர் சித்தம் அழகியாராக சிறப்பு பெறுகிறார்.



மக்களுக்கு மட்டுமல்லாமல் அரசாங்கத்திற்கும் அவர் பல வழிகளில் உதவி வருகிறார். தற்பொழுது உலகின் மிகப் பெரிய பேரிடராக உருவெடுத்துள்ள கொரோனா கனடாவிலும் தனது கோரத் தாண்டவத்தை நிகழ்த்தி வரும் சூழ்நிலையில் கனடிய ஆயுதப் படையின் வீரர்கள் தங்குவதற்காக தனது ஹோட்டல் றைகளையும் சங்கர் நல்லதம்பி தந்து உதவியிருக்கிறார். தற்போது கனடிய ஆயுதப் படையின் வீரர்கள் பலர் பிற மாகாணங்களிலிருந்து றொரன்ரோ பெரும்பாகத்திற்கு அழைக்கப்பட்டு இங்கு தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். கனடிய அரசாங்கத்தின் ஏற்பாட்டின் படி, இந்த பகுதிகளில் அமைந்துள்ள முதியோர் வசிக்கும் இல்லங்களில் "கொரோனா" நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏதாவது அவசர உதவிகள் தேவையென்றால் அவற்றை உடனேயே வழங்குவதற்கு இந்த வீரர்கள் அங்கே தயார் நிலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தன் பரபரப்பான அலுவல்களுக்கிடையிலும் சிறிது நேரத்தை ஒதுக்கி என்னிடம் உரையாடி மகிழ்ந்தார் சங்கர் நல்லதம்பி. இணையங்களில் எனது உரைகளைக் கேட்டு இன்புற்றதாக அவர் அப்போது தெரிவித்தார். பாரதி தாசனின் "நூலைப் படி" என்ற குறுங்கவிதையை நான் கூறக் கேட்டு அக மகிழ்ந்தார். அதீத உபசரணைகளோடும், அன்பளிப்புக்களோடும் அன்போடு என்னை கரம் குலுக்கி வழியனுப்பி வைத்தார். (அப்போது கொரோனா இல்லாத காலம்)

*(வளரும்)*



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
416-332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள்



## செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோயில்

### - மட்டக்களப்பு -

“சித்தியும் சித்திதருந் தெய்வமாகித் திகழும்பரா
சத்தியும் சத்தி தழைக்கும் சிவமும் தவம் முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும் வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும் உள்ளே புரக்கும் புரத்தையன்றே.”

உயிர்கொல்லி நோயாய் உலகெங்கும் பரவியுள்ள கொரானா வைரசிலிருந்து தப்பி உயிர்வாழக் கையாள வேண்டியவை:

1. சமூக இடைவெளி
2. கைகளை அடிக்கடி கழுவுதல்
3. தேவையற்று வெளியே செல்லுதல்
4. அரசின் ஆணையை ஏற்று வீட்டில் இருப்பது

இந்த நான்கு நெறிமுறைகளுமே உயிர்களைப் பலிகொள்ளும் கொரானா என்ற கொடிய வைரசை ஒழிக்க உதவும் நடைமுறைகளாகும். இந்த நான்கு நடைமுறைகளையும் அனைவரும் பின்பற்றி நலமுடன் வாழ்வோம்.

நாமும் நலம்பெற்று, உலகமக்களும் நலமே வாழ, ஆத்மசுத்தியோடு இறைவனைப் பிரார்த்திப்போம். சிவவழிபாட்டிலே நோய் பிணி மற்றும் மரணத்தை வெல்லும் மந்திரமாக மகா ம்ருத்தும்ஜெய மந்திரம் கூறப்பட்டுள்ளது. இறைவனை வழிபடும்பொழுது தினமும் இந்த மந்திரத்தை ஒரு முறையோ அன்றி பலமுறையோ காலை, மாலை வேளைகளில் கூறி, இந்த உலகத்தைப் பீடித்துள்ள நோய் பிணி நீங்கி அனைவரும் நலம்பெற்று வாழ வேண்டும் என்ற வேண்டுதலை முன்வைத்து, இறைவனை வழிபடவேண்டும். நிச்சயம் பலன் கிடைக்கும்.

மகா ம்ருத்தும்ஜெய மந்திரம்

ஓம் த்ரியம்பகம் யஜாமஹே
ஸுகந்திம் ப்ு்டி வர்த்தனம்
உர்வாருஹமிவ பந்தனாத்
ம்ருத்யோர் மு்ய மாம்ருதாத்”
ஓம் நமச்சிவாய ஓம்நமச்சிவாய ஓம்நமச்சிவாய.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்த சில சம்பவங்களும் செட்டிபாளையம் கண்ணகை அம்மன் ஆலயத்தைப்பற்றி அறிய உதவுகின்றன. ஒல்லாந்தர் காலத்திலே பசுக்கோல் முதலி என்பவன் மட்டக்களப்பிலுள்ள முக்குலத்து நிலமைகளைப்பற்றிக் கண்டியரசனான ஸ்ரீகீர்த்திசிறிராஜசிங்கனிடம் முறைப்பாடு செய்து இரு நிலமைகளைச் சிரச்சேதம் செய்வித்தான். இதன் பின்னர் தானே அதிபதி என எண்ணங்கொண்டு மனம்போனபோக்கிலே நடக்கலானான். நாப்புட்டிமுனையில் கிறிஸ்தவதேவாலயம் ஒன்றினையும் கட்டியதோடு அனைவரையும் பயமுறுத்தி லஞ்சம்பெற்றும் வந்தான். நாளடைவில் பசுக்கோல்முதலியின் சுயரூபம் வெளிப்பட, மன்னனால் இராச சேவையிலிருந்து நீக்கப்பட்டான்.

கி.பி 1747 - 1782 வரையான காலப்பகுதியில் ஸ்ரீ கீர்த்திசிறி ராஜசிங்கன் கண்டியின் அரசனாக இருந்தபோது மட்டக்களப்பின் பிரதேசங்களை வரையறை செய்ய எண்ணங்கொண்டான். இக்காலப்பகுதியில் மட்டக்களப்பின் கரையோரப்பகுதி ஒல்லாந்தர்வசம் இருந்தது. எனவே ஏனைய பகுதிகளை இரண்டாகப் பிரித்து தெற்குப்பகுதிக்குக் கந்தப்போடி என்பவரையும், வடக்குப் பகுதிக்கு அறுமக்குட்டி என்பவரையும் போடிகளாக நியமனம் செய்தான்.

மட்டக்களப்பின் வடபாகமாகவுள்ள எருவில், போரமுனைநாடு, மண்முனைநாடு, கோரளை என்னும் நான்கு கிராமங்களையும் அறுமக்குட்டிப் போடியும், தெற்கே உள்ள கரவாகு, சம்மாந்துறை, பாணகை, உன்னரசுகிரி என்னும் நான்கு பகுதிகளையும் கந்தப்போடியும் பரிபாலனம் செய்து வந்தனர். அறுமக்குட்டிப்போடி கல்வியிற் சிறந்தவர். பராக்கிரமசாலி. இவர் செட்டிபாளையத்தில் கண்ணகி அம்மனை இருத்தினார் என மட்டக்களப்பு மான்மியத்திலே குறிப்பிடப்பட்டுள்ளது.

செட்டிபாளையம் கண்ணகி அம்மன் ஆலயம் முறையாக நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது என்பதை, ஆலயத்தின் கூட்டக்குறிப்புக்கள் தெளிவாக்கியுள்ளன. கோவில் கூட்டங்களுக்கு வன்னிமை தலைமை தாங்க, உடையார், விதானை, தோம்புதோர், வண்ணக்கர், வட்டைவிதானை, கிராமச்சங்க அக்கிராசனர், புலவர், வைத்தியர், சோதிடர், குருக்கள், முதலி, போடி ஆகியோருடன் பொதுமக்களும் சமூகங்கொடுத்துள்ளனர்.

ஏனைய ஆலயங்களில் நடைபெறும் விழாக்களிலிருந்து கண்ணகி அம்மன் ஆலய விழாக்கள் முற்றிலும் மாறுபட்டுக் காணப்படும். கண்ணகி அம்மனுக்குரிய பூசையினைச் சடங்கு என்று அழைப்பது மட்டக்களப்பு மரபாகக் காணப்படுகின்றது. தமிழர் தாயகப் பகுதிகளான யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, மற்றும் மலையகப்பகுதிகளிலும் சடங்கு என்ற சொல், திருமணம், பூப்புநீராட்டுவிழா, மற்றும் மரணநிகழ்வுகளில் இடம்பெறும் நிகழ்வுகளைக் குறிக்கப் பயன்படும் சொற் பிரயோகமாகக் காணப்படுகின்றது. மட்டக்களப்பிலே நடைபெறும் கண்ணகி அம்மன் கோயில் சடங்குகளில் பூசாரிமார் வேப்பிலை, மஞ்சள், கமுகம்பாளை, உடுக்கு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பர் இவ்வாறான சடங்குகள், செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோயிலில் ஆரம்பத்தில் மூன்று சடங்குகளாக இடம்பெற்று, பின்னர் ஐந்தாக மாற்றம் பெற்றது. ஏழு கண்ணகி அம்மன் சிலைகள் கொண்டு வரப்பட்டமையை நினைவுகூர்ந்து, ஏழு சடங்காகப் பிற்காலத்திலே மாற்றம் பெற்றது. இச்சடங்குகள் இரவிலும், பகலிலும் நடைபெறும்.

*வளரும்...*







மலேசிய மடல்:

# மலேசிய – இந்திய செம்பனைநெய் வர்த்தகம்: சீர்குலைத்த முன்னாள் பிரதமர் சீர்செய்த இந்நாள் பிரதமர்



நக்கீரன்

கோலாலம்பூர், மே:28


மலேசியாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான வர்த்தக உறவு நெடிய வரலாற்றைக் கொண்டது. அந்தப் பாரம்பரியம் சிந்தாமல் சிதறாமல் இன்றளவும் தொடர்கிறது் இருநாட்டுத் தலைவர்களும் வழிவழியாக ஆற்றிவரும் பங்களிப்பு, இரு நாடுகளிலும் நிலவும் உள்நாட்டு அரசியலைக் கடந்து கோலாலம்பூருக்கும் புதுடில்லிக்கும் இடையே நீடிக்கும் தூரதக ஒருங்கிணைப்ப்பு சுமூகமான இருதரப்பு அரச உறவெல்லாம் இதற்குக் காரணம்.

இவற்றையும் கடந்து மலேசியாவின் முதல் நிலை வர்த்தகப் பங்காளியாக இந்தியா தொடர்ந்து பங்காற்றி வருகிறது. அதன் அடிப்படையில், இந்தியாவிற்குத் தேவையான சமையல் நெய்த் தேவையை ஈடுகட்டும் வகையில் செம்பனை கச்சா நெய்யை இந்தியா தொடர்ந்து இறக்குமதி செய்து வந்தநிலையில், கடந்த நான்கு மாதங்களாக அதில் தேக்க நிலை ஏற்பட்டது.









அப்போதைய பிரதமர் துன் டாக்டர் மகாதீர், இந்தியாவை அடுத்தடுத்து சீண்டி வந்த நிலையில் இந்தியா காதும் காதும் வைத்தமாதிரி, உலகின் முதல் செம்பனை உற்பத்தி நாடான இந்தோனேசியா பக்கம் தன் கவனத்தைத் திருப்பியதுடன் மலேசியாவிலிருந்து செம்பனை நெய் இறக்குமதிக்கு மறைமுகத் தடையை விதித்தது.

அந்த முறுகல் நிலையை தற்போதைய பிரதமர் டான்ஸ்ரீ முகைதீன் யாசின் இலாவகமாக தீர்த்து வைத்ததுடன், இரு நாடுகளுக்கு இடையேயான செம்பனை கச்சா நெய் வர்த்தகத்தை பழைய நிலைக்கு கொண்டு சென்று, இரு நாடுகளுக்கும் இடையிலான பழைய வர்த்தகத்தை சீர்செய்து நிலைநாட்டி உள்ளார்.

கொடிய ஆட்கொல்லி கிருமியான கொரோனா பாதிப்பு தொடர்பில் நாடே நடமாட்டக் கட்டுப்பாட்டு சூழலில் இருந்த நெருக்கடியான வேளையிலும் மலேசியாவிற்கான இந்தியத் தூதரகத்தின் மூலம் காய்நகர்த்தி குறுகிய காலத்திலேயே இரு நாடுகளுக்கான செம்பனை வர்த்தகத்தை பழைய நிலைக்கு கொண்டு சென்றதன்வழி முகைதீன் தன் ஆளுமையை மறைமுகமாக பறைசாற்றியுள்ளார்.

இடையில் ஏற்பட்ட சிக்கலுக்கான தொடக்கப்புள்ளி கடந்த செப்டம்பர் மாதம் ஐநா மன்றத்தில் தொடங்கியது.

இந்தியாவின் பாஜக அரசு, இந்தியாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க அரசியல் சாசனத்தின் 370-ஆவது பிரிவை அகற்றியதன் தொடர்பில் மகாதீர் தெரிவித்த கருத்து புதுடில்லையை மெல்ல சூடாக்கியது.

இந்தியாவின் காஷ்மீர் பிரச்சினை, குரங்கு பிறக்கும்போதே வாலுடன் பிறந்த கதையாக இன்றளவும் தொடர்கிறது. அந்தச் சிக்கல் பவள விழாவை எட்ட இருக்கும் தற்போதைய சூழலில், அந்தச் சிக்கல் நீடிப்பதற்கு இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேருதான் காரணம் என்று காங்கிரஸ் எதிர்முகாமைச் சேர்ந்தவர்கள் விமர்சிப்பதுண்டு.

நேருவிற்குப் பதிலாக ஒருவேளை, வல்லப பாய் பட்டேல் பிரதமராக இருந்திருந்தால், அவர் சுதந்திர இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சர் மற்றும் துணைப் பிரதமர் என்னும் வகையில் ஹைதரபாத் சுல்தானான நிஜாமுதீனை அடக்கி ஒன்றுபட்ட ஆந்திரப் பிரதேசம் உருவாகக் காரணமாக இருந்ததைப் போல, காஷ்மீர் பிரச்சனைக்கும் அப்போதேத் தீர்வு கண்டிருப்பார் என்று சொல்லப்படுவதுண்டு.

நேருவோ, முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக இருந்த காஷ்மீரை இந்தியா சுதந்திரம் அடைந்த தருணத்தில் ஆண்டவர் இந்து மன்னர் என்னும் அடிப்படையில் அவர் இந்தியாவுடன் இணைய விரும்பினாலும் பெரும்பான்மை மக்களின் கருத்திற்கு மதிப்பளிக்கும் வகையில் காஷ்மீர் மாநிலத்திற்கு மட்டும் சிறப்பு அதிகாரத்தை அளித்தார். அதற்கு ஏதுவாக அரசியல் சட்டத்திலேயே வகை செய்தார். அதுதான், 370-ஆவது அரசியல் சட்டப்பிரிவு.

அதேவேளை, நேரு திறமை இல்லாதவர் என்று பொருள் கொண்டுவிடக் கூடாது. சமதருமக் கொள்கையையும் சோசலிச பொருளாதாரத்திலும் நம்பிக்கைக் கொண்டிருந்த நேரு, ஜனநாயக மாண்மைப் போற்றும் வகையில்தான் அந்த ஏற்பாட்டைச் செய்தார்.

ஆனால், அவரின் போதாத காலம் பாகிஸ்தானின் தந்தை முகமது அலி ஜின்னாவிற்குப் பின் அந்த நாட்டில் ஜனநாயக ஆட்சியை பாகிஸ்தானிய இராணுவம் தொடர்ந்து தன் கைப்பிடிக்குள் வைத்திருக்கத் தொடங்கிவிட்டது. பல வேளைகளில் இராணுவ ஜெனரல்களே புரட்சி செய்து பாகிஸ்தானை ஆண்டுள்ளனர்.

ஜியா வுல் ஹக், அப்போதைய பிரதமர் புட்டோவை வீழத்தியதுடன் உலக நாடுகளின் கருத்தை துச்சமெனக் கருதி அவரைத் தூக்கிலுமிட்டார். அண்மையில்கூட மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் நவாஸ் செரீப்பை சிறைப்படுத்தி இராணுவ ஆட்சியை நடத்தியவர் ஃபெர்வேஸ் முஷாரஃப் என்னும் இராணுவ ஜெனரல்.

இவ்வாறாக தொடர்ந்து இராணுவத்தின் மேலாண்மை இருப்பதால், இந்திய-காஷ்மீர் எல்லையில் கடந்த எழுபது ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்கிறது வன்முறை கலந்த தீவிரவாதப் பிரச்சினை. இரு நாடுகளுக்கிடையே போர்களும் மூண்டுள்ளன.

இந்த நிலையில்தான், நாடாளுமன்றத்தில் தனக்கிருக்கும் வலுவான பெரும்பான்மையைப் பயன்படுத்தி எதிர்க்கட்சித் தலைவர்களின் கருத்தையும் பொருட்படுத்தாமல் காஷ்மீருக்கு சிறப்பு அதிகாரம் தரும் 370-ஆவது அரசியல் சட்டப்பிரிவை அகற்றியதுடன் ஃபரூக் அப்துல்லா, மெக்பூபா உள்ளிட்டத் உள்ளூர் தலைவர்களையும் வீட்டுச் சிறைப்படுத்தி அங்கு ஊரடங்கு சட்டத்தையும் நடைமுறைப்படுத்தினார் பிரதமர் மோடி. தகவல் சாதனமும் முடக்கப்பட்டது.

இது குறித்துதான் மகாதீர் கருத்து தெரிவித்தபோது, காஷ்மீரில் பெரும்-பான்மையாக வாழும் முஸ்லிம் மக்கள்மீது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்-படுகிறது என்றும் ஐநா தலையிட வேண்டும் என்றும் கருத்து தெரிவித்திருந்தார்.

அடுத்து மோடி கொண்டு வந்த குடியுரிமை சட்டத் திருத்தம் குறித்தும் கருத்து சொன்ன மகாதீர், இந்தியாவில் வாழும் முஸ்லிம் மக்கள்மீது பாகுபாடு காட்டப்படுகிறது என்றார்.

உண்மையில், இதற்கும் வெகுகாலத்திற்கு முன்பிருந்தே மகாதீர்மீது இந்தியா அதிருப்தி கொண்டிருந்தது. நிந்தனை சமயப் பிரச்சாரகரான ஜாஹிர் நாய்க்கிற்கு நிரந்தரக் குடியுரிமை அந்தஸ்து அளித்ததுடன் இந்தியாவில் சட்ட விரோத நாணயப் பரிமாற்றம், தீவிரவாதம் உள்ளிட்ட வழக்குகள் குறித்து தேடப்படும் நபராக அறிவிக்கப்பட்ட நிலையிலும் அவரை இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பாதது குறித்து இந்தியா சினத்தை வெளிப்படுத்தாமல் அமைதி காத்து வந்தது.

இவ்வாறாக, அடுத்தடுத்து இந்திய நடுவண் அரசை மகாதீர் கோபப்படுத்தி வந்ததால், வேறு வழியின்றி இந்தியா இந்த முடிவுக்கு வந்தது. அப்போதுகூட சளைக்காத மகாதீர், இந்தியா அப்படி முடிவெடுத்தால் இது குறித்து பன்னாட்டு வர்த்தகத் தீர்ப்பாயத்தில் வழக்குத் தொடுப்பேன் என் மனதில் பட்டதைச் சொன்னேன் அவ்வளவுதான் தவிர, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், மியன்மார், வியட்நாம், எத்தியோப்பியா, சௌதி அரேபியா, எகிப்து, அல்ஜீரியா, ஜோர்டான் உள்ளிட்ட நாடுகளுடன் வர்த்தகத்தைப் பெருக்கி இந்தியாவுடனான வர்த்தக இழப்பை ஈடுகட்ட முடியும் என்றெல்லாம் கொக்கரித்தார்.

அதற்குள் அவர் தனக்குத் தானே கண்ணி வைத்துக் கொண்டதைப் போல அன்வாருக்கு பிரதமர் பதவியை சொன்னபடி விட்டுத்தர மனமின்றி என்னென்னவோ சொல்லி, ஏதேதோ செய்து நம்பிக்கைக் கூட்டணி ஆட்சியை சிதைத்து விட்டார். தானும் கவிழ்ந்து போனார்.

எல்லாவற்றையும்விட, மக்கள் ஒரு மாற்றத்தை விரும்பி, நம்பிக்கையுடன் நம்பிக்கைக் கூட்டணியை ஆட்சியில் அமர்த்தினர். அதற்கு பலனாக, அந்த வாக்காளர்கள் மனதிலும் அவநம்பிக்கையை விதைத்தார் மகாதீர்.

தான் பிரதமராக துணை நின்ற "மக்கள் நீதிக் கட்சி", "ஜனநாயக செயல் கட்சி" ஆகிய இரு கட்சிகளையும் சிதைத்த மகாதீர்..., நம்பிக்கைக் கூட்டணி பெயரில் இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வந்த மகாதீர்..., பெரும்பாலான தரப்பினருக்கு அவநம்பிக்கையைத்தான் பரிசளித்தார்.

தற்பொழுது நாட்டின் தேசிய அரசியல் புதிய கோணத்தில் பயணத்தைத் தொடங்கிவிட்ட நிலையில், பிரதமர் முகைதீன் சிர்கெட்ட ஒரு வர்த்தகப் பாதையை கச்சிதமாக செப்பம் செய்துவிட்டார்.

இதனால், தடுமாறிக் கொண்டிருந்த மலேசிய செம்பனைத் தொழில் பிடு நடை போடத் தொடங்கியுள்ளது. செம்பனை கச்சா நெய் டன்னுக்கு 2,400 வெள்ளியை எட்டும் என்று சந்தை மதிப்பீட்டாளர்கள் கணித்திருப்பது அதற்கு சான்று!.

# மரண அறிவித்தல்

தோற்றம்: 03-06-1930    மறைவு : 24-05-2020



## திரு இராஜா இராஜேந்திரராஜா

## (பத்திரிகையாளர்)

**யாழ். மானிப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட இராஜா இராஜேந்திரராஜா அவர்கள் 24-05-2020 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.**

அன்னார், காலஞ்சென்றவர்களான மானிப்பாய் தெற்கைச் சேர்ந்த டபிள்யு. எம். இராஜா தையல்நாயகி தம்பதிகளின் அன்புப் புதல்வரும், நல்லூரைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா, பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தனலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், ஆர். ஆர். இராஜ்குமார் (அதிபர் - J.R.B.Group, கனடா), இராஜலட்சுமி (கனடா), இராஜநாதன் (பிரித்தானியா), இராஜமனோகரி (ரஜனி, கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுமதி, கிருபானந்தம், சாந்தினி, சஞ்சித் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சேனாதிராஜா, தேவராஜா (பிரித்தானியா), காலஞ்சென்றவர்களான ரட்ணராஜா, ராஜேஸ்வரி சிவப்பிரகாசம், மகேந்திரராஜா, செல்வராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பூலோகலட்சுமி மற்றும் P.K. மகேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சாய்பிருந்தன், யெனார்த்தனன், கிரிஜா கீதன், ரஜீவன், சிரான், யானுனி, சபிலன், மிதுலன், திவ்யா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 27-05-2020 புதன்கிழமை அன்று யாழ்ப்பாணம் நல்லூர் 338 பருத்தித்துறை வீதியிலுள்ள சங்கிலியன் தோப்பு எனும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் கோம்பயன் மணல் மயானத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

**தகவல்: குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு

ஆர்.ஆர். இராஜ்குமார் - மகன்: 647 289 6164



MEGA Financial Group
Ruban Lingam
Insurance Agent
Call:647-928-5626
PH28 - 4168 Finch Ave, East
Scarborough, ON M1S 5H6
Web: www.rubanlingam.com
Email: rubanlingam@hotmail.com

தமிழ் பேசும் இளம் சட்டத்தரணியான அரவிந் ஜெகதீசன் அவர்களை அழைப்பதன் மூலம் உங்கள் வழக்குகள், தொழில் சம்பந்தமான பிரச்சனைகள், வீட்டு உரிமையாளர்கள் - குடியிருப்பாளருக்கு இடையிலான வழக்குகள் ஆகியவை தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
437.229.9643
• Employment Law • Wrongful Dismissal
• Severance Packages • Human Rights
• Landlord and Tenant Law • Employment Standards
Aravinth Jegatheesan
Barrister and Solicitor
437.229.9643
ARAVINTH LAW 920 Yonge St, Suite 510 Toronto, ON, M4W 3C3

வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated.
Off: 416-298-3200
Dir 647-963-0705

23rd Years in Publishing

UTHAYAN
உதயன்

Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
On12th October 2019
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
1646 VICTORIA PARK AVE., SUITE 1 (BETWEEN LAWRENCE & EGLINTON) TORONTO, ON. M1R 1P7
PARK PLAZA
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில்
உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1260 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 29, 2020

# கனடா அவசர சம்பள மானியத் திட்டங்கள் மூலம் பணியாளர்களை பணியில் இணைத்துக் கொள்ளுமாறு பிரமர் ஜஸ்டின் வேலைகொள்வோரிடம் கோரிக்கை



கனடா முழுவதிலும் மாகாணங்களும், பிராந்தியங்களும் பொருளாதார செயற்பாடுகளை முழுமையாகவோ, பகுதியாகவோ மீள ஆரம்பிக்கும் வேளையில், கனடா அவசர சம்பள மானியம் போன்ற திட்டங்களைப் பயன்படுத்திப் பணியாளர்களை மீண்டும் பணி-யில் இணைத்துக் கொள்ளுமாறு வேலைகொள்வோர் அனைவரி-டமும் பிர-தம மந்திரி கோரிக்கை விடுத்துள்ளார். நேற்று முன்தினம் புதன்கிழமை காலை ஒட்டாவா மாநகரில் இருந்து நாட்டு மக்களுக்கு அவர் உரையாற்றினார். உரை-யின் இறுதியில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கும் அவர் பதிலளித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், “ கனடாவில் குபெக் மாகாணத்திலும், ஒன்றாரியோ மாகாணத்திலும் உள்ள முதியோருக்கான நீண்டகால பராமரிப்பு நிலையங்களில் உதவி புரிவதற்குக் கனேடிய ஆயுதப் படையினர் கடந்த சில வாரங்களில் சென்றுள்ளார்கள்.

குபெக்கில் உள்ள நீண்ட காலப் பரமரிப்பு நடவடிக்கையின் தற்போதைய நிலைமை குறித்த அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. தேவைக்குக் குறைவான பணியாளர்கள் பணியில் இருப்பது உட்படக் கவலையளிக்கும் பல விடயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், இந்த அறிக்கை குபெக் மாகாணத்துக்கும் வழங்கப்பட்டுள்ளது. ஒன்றாரியோ நிலைமைகள் குறித்த அறிக்கை ஒன்றைக் கனேடிய ஆயுதப் படையினர் நேற்று வெளியிட்டார்கள். முதி-யோர் வதிவிடங்களிலும், நீண்டகால பராமரிப்பு நிலையங்களிலும் உள்ள நிலை-லமைகள் குறித்து முதல்வர்களுடன் நாளை நடத்தும் வாராந்த கலந்துரையாடலில் உரையாடவுள்ளது.

மேலும், கோவிட்-19 உலகத்தொற்றுநோய் வேளையில் கனேடியர்களுக்கு ஆதரவளிப்பதற்குக் கடந்த வாரங்களில் பல பொருளாதார உதவித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. மாணவர்களுக்கும், அண்மையில் பட்டம் பெற்றோருக்கும் எதிர்வரும் சில மாதங்களுக்கு உதவியளிப்பதற்கான 9 பில்லியன் டெ-ாலர் திட்டமும் இந்தப் பொருளாதாரத் திட்டத்தில் அடங்குகிறது. தற்போது மாகாணங்களிலும், பிராந்தியங்களிலும் சில பொருளாதார நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பமாகி, பலர் பணிக்குத் திரும்பும் வேளையில், பல வேலைகொள்வோர் பணியாளர்களைப் பணிக்கமர்த்த முற்பட்டுள்ளார்கள். கனேடிய இளையோருக்கான 45,000 வேலைவாய்ப்புகள் Canada.gc.ca இல் உள்ளன.” இவ்வாறு கனடியப் பிர-தமர் இன்று தெரிவித்ததோடு ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கும் தகுந்த பதிலை அளித்தார்.

**மேலதிக தகவல்களுக்கும், ஊடகங்களின் கேள்விகளுக்கும்:**
**டொறீன் சவுந்தரநாயகம்- பாராளுமன்ற உறுப்பினர்**
**ஹறி ஆனந்தசங்கரியின் அலுவலகம்- ஸ்காபுறோ - கனடா**
Gary.Anandasangaree.C1A@parl.gc.ca

# ஒன்றாரியோவில் மோசமான நிலையில் இயங்கிய ஐந்து முதியோர் இல்லங்களை பொறுப்பேற்று நடத்த நடவடிக்கை எடுப்பதாக முதல்வர் டக் போட் அறிவிப்பு

ஒன்றாரியோ மாகாணத்தில் மோசமான நிலையில் இயங்கிய ஐந்து முதியோர் இல்லங்களை அரசாங்கம் பொறுப்பேற்றுநடத்த நடவடிக்கை எடுப்பதாக முதல்வர் டக் போட் அறிவித்தார். நேற்று வியாழக்கிழமை கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தின் பாரளுமன்றமான குயின்ஸ்பார்க் வளாகத்தில் அமைந்துள்ள தனது அலுவலகத்திலிருந்து இணையவழி ஊடாக ஊடகவியலாளர்களோடு உரையா-டியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்..

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,



எமது ஒன்றாரியோ மாகாணத்தில், முதியோர் பராமரிப்பு இல்லங்கள் குறித்த கனடியப் படையினரின் அறிக்கையினை வெளியிடுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.. அவ்வறிக்கையினைப் பெற்றவுடனேயே நாம் ஒரு முழுமையான விசாரணையினைத் தொடங்குவோம்.. அவ்விசாரணையின் முடிவுகள் காவற்றுறையினரிடம் கையளிக்கப்படும்.

ஐந்து நீண்டகால முதியோர் இல்லங்களின் நிர்வாகத்தினை தற்காலிகமாக கையிலெடுத்து நடத்துவதற்கான செயற்பாட்டை ஆரம்பித்தல், இலகுவில் நோய்த்தொற்றுக்கு உள்ளாகக்கூடிய இல்லங்களின் ஆய்வுகளை விரைவுபடுத்துதல், மானிலமெங்கும் உள்ள நீண்ட கால பராமரிப்பு இல்லங்களில் மேலதிகமான பரி-சோதனைகளை நடத்துதல் போன்றவை உள்ளிட்ட நடவடிக்கைகளின் மூலம் நாம் அதிகம் பாதிக்கப்படக்கூடியவர்களைப் பாதுகாக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறோம். உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நாம் ஐந்து நீண்ட கால பராமரிப்பு இல்லங்களின் நிர்வாகத்தை தற்காலிகமாக கையிலெடுக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளோம். அவற்றின் விபரம் பின்வருமாறு: ஈற்றன்வில் பராமரிப்பு இல்லம் (எற்றோபிக்கோக்), ஹாவ்தோர்ன் பிளேஸ் (நோர்த் யோர்க்), அல்ராமண்ட் பராமரிப்பு இல்லம் (ஸ்கார்பரோ), ஒச்சாட் வில்லா (பிக்கரிங்) மற்றும் கமிலா பராமரிப்பு இல்லம் (மிசிசாகா). எமது அரசாங்கம் ஏற்கனவே ஏனைய இரண்டு இல்லங்களின் நிர்வாகங்களைக் கையிலெடுத்துள்ளது.

அடுத்துவரும் 21 நாட்களில், நோய்த்தொற்றினைச் சமாளிப்பதில் சவால்களை எதிர்கொள்ளும் நோய்த்தொற்றுக்கு முகங்கொடுக்கும் நிலையிலுள்ள ஏனைய இல்லங்களில் எமது ஆய்வுகளை நடத்தவுள்ளோம்.

அடுத்துவரும் 30 நாட்களில், நீண்டகால பராமரிப்பு அமைச்சு அதிக ஆபத்துள்ள இல்லங்களிலும் மாகாணத்திலுள்ள அனைத்து இல்லங்களிலும் திடீர் பரிசே-சாதனைகளை மேற்கொள்ளவுள்ளது.

இவ்வாறு முதல்வர் டக் போர்ட் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**விஜய் தணிகாசலம்:- ஸ்காபரோ - றூஜ் பார்க் சட்டமன்ற உறுப்பினர் ஒன்றாரியோ.**

Life Insurance
Don't think twice
Life Insurance
Critical Illness
Disability
Investments
Group Benefits
RRSP / RESP
iNFORCE LIFe Financial Services Inc.
Delivering Promises. Building Trust.

RESP
Registered Education Saving Plans
40% - 20% Goverment Grant
Plus additional 15-10% on us.
Start Saving Early

Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay:
416.704.8074